வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P.

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු

MARUTHI MONEY EXCHANGE

மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 07.07.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 189 | பக்கங்கள் : 16

# இந்தியா - இலங்கை மின்சாரம் பகிர்வு; பேச்சுகள் இறுதிக்கட்டத்தை எட்டின!

கொழும்பு, ஜூலை 07

**இலங்கை - இந்தியா இடையே கடல்வழியே கேபிள்கள் மூலம் மின்சாரத்தை பகிரும் திட்டம் தொடர்பான பேச்சுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்று அரச உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.**

சென்னை - அநுராதபுரம் இடையே செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டம் தொடர்பாக கடந்த "நல்லாட்சி" அரசாங்கத்தின் காலத்தில் பேச்சு ஆரம்பிக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து கிடப்பில் போடப்பட்ட இந்தத் திட்டம் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் மீண்டும் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தத் திட்டம் தொடர்பில் பல இணக்கப்பாடுகள்

15

## பெருந்தலைவர் சம்பந்தனின் இறுதிக் கிரியைகள் இன்று

திருகோணமலை, ஜூலை 07

இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் முன்னாள் தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடல் திருகோணமலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை அக்கினியுடன் சங்கமமாகவுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமான இரா. சம்பந்தனின் பூதவுடல், நேற்று முன்தினம் முதல் திருகோணமலையில் அவரின் இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி வரை மக்கள் அஞ்சலி செலுத்தமுடியும். 1.30 மணிக்கு அஞ்சலிக்கூட்டம் நடைபெறும்.

15

## கிளிநொச்சி விபத்தில் குடும்பஸ்தர் பலி!

கிளிநொச்சி, ஜூலை 07

கெப் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை மதியம், பரந்தன் - கிளிநொச்சி வீதியில் குடமுருட்டி பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் கிளிநொச்சி - கோணவிலை சேர்ந்த கோ. புருசோத் (வயது 55) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே

19

## முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களுடன் ஐக்கிய தேசிய கட்சி இரகசிய பேச்சு?

கொழும்பு, ஜூலை 07

ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவை பெறும் முயற்சிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகிறார் என்று அறிய வருகிறது. இதற்காக, ஐக்கிய மக்கள் சக்தியுடன் தற்போது கூட்டணியில் உள்ள சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றுடனேயே இந்தப் பேச்சு நடைபெறுதாகத் தெரிய வருகின்றது.

கடந்த 2015ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவால் ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டணியில் இந்த இரண்டு கட்சிகளும் இருந்தன. 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் ஐ. தே. கவின் கூட்டணியிலேயே இந்தக் கட்சிகள் இருந்தன.

எனினும், 2020ஆம் ஆண்டு

15

## வெள்ளை கொடிகளை பறக்கவிடுக

நிந்தவூர், ஜூலை 07

தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் இறுதிக் கிரியைகள் இன்று இடம்பெறவுள்ளது. இதையொட்டி கிழக்கு மாகாணம் முழுவதும் வெள்ளைக்கொடிகளை பறக்கவிடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்களின் சார்பிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் பொருளாளர் ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் விடுத்த அறிக்கையில்,

"இலங்கையில் புரையோடிப் போயுள்ள தேசிய

15

## பெண் குத்திக் கொலை; கணவர் சந்கேத்தில் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 07

இரு பிள்ளைகளின் தாய் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

கொழும்புத்துறை - ஏ. வி. வீதி - மூன்றாம் ஒழுங்கையில் வசித்து வந்த திவிகரன் நிஷானி (வயது 29) என்ற பெண்ணே இவ்வாறு கொல்லப்பட்டார்.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் பெண்ணின் கணவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பிரித்தானியாவின் புதிய பிரதமர் தமிழீழ கனவை நனவாக்குவார்!

### சிங்கள வார இதழின் அச்சம் இது

கொழும்பு, ஜூலை 07

பிரித்தானியாவில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றிருக்கும் தொழில் கட்சியின் புதிய பிரதமரான கியர் ஸ்ராமர் இலங்கையை பிளவுபடுத்தி ஈழக்கனவை நனவாக்கி விடுவார் என்று சிங்கள வார இதழ் ஒன்று அச்சம் வெளியிட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார இதழின் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

பிரித்தானியாவில் புதிதாக பதவியேற்ற தொழில் கட்சி அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கை இலங்கைக்கு மிகவும் மோசமானதாக



அமையும் என்ற பெரும் அச்சம் இங்குள்ள இலங்கையர்கள் இடையே உள்ளது. புலம் பெயர் புலிகளின்

15

## வாகனத்தால் மோதப்பட்டு முன்னாள் போராளி மரணம்

மன்னார், ஜூலை 07

வாகனத்தால் மோதப்பட்டு முன்னாள் போராளி ஒருவர் உயிரிழந்தார். இது திட்டமிட்டு வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட விபத்தா என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மன்னார் - மாந்தை மேற்கு - அடம்பன் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் முன்னாள் போராளியான கோபால கிருஷ்ணன் கோகுல் பிறேம்குமார் (வயது - 42) என்பவரே உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது, உயிரிழந்தவர், முன்னதாக வீட்டுக்கு முன்பாக நின்று கைபேசியில் உரையாடிக்

15

## கட்சிகளை பிரித்து தேர்தலில் வெல்வது காலாவதியான உத்தி!

### நாமல் ராஜபக்ஷ எம்.பி.

கொழும்பு, ஜூலை 07

கடந்த காலங்களில் கட்சிகளை பிரித்து தேர்தலில் வெற்றிபெற முடியுமாக இருந்தாலும் தற்போது அவ்வாறு வெற்றிபெற முடியாது என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ அறிவுரை வழங்கியுள்ளார். இவ்வாறு கட்சிகளை பிரித்து தேர்தலில் வெற்றி பெறுவது காலாவதியான உத்தி - இவ்வாறு தெரிவித்துள்ளார் பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2019ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டதன் மூலம் அந்தக் கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வி குறித்து சிந்திக்க வேண்டும். கட்சி பிளவுபட்டால் தேர்தலில் தோல்வியை நிச்சயம்

15

## யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் லயனல் பெர்னாண்டோ காலமானார்

கொழும்பு, ஜூலை 07

யாழ்ப்பாணத்தின் முன்னாள் அரச அதிபரான லயனல் பெர்னாண்டோ தனது 90ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.



1960களில் யாழ். மாவட்ட அரச அதிபராக இருந்த லயனல் பெர்னாண்டோ அனைத்து தரப்பினரின் பாராட்டுகளைப் பெற்றிருந்தார்.

இலங்கை ரூபவாஹினி தலைவராகவும் பின்னாளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஆளுநராகவும் பெர்னாண்டோ பணியாற்றினார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலி களுடன் சமாதானப் பேச்சை முன்னெடுத்த போது, அந்தப் பேச்சிலும் இவர் பங்கேற்றிருந்தார்.

15

சாவகச்சேரி மருத்துவமனை விவகாரம்:

## தென்மராட்சி பிரதேசத்தில் கதவடைப்புக்கு அழைப்பு

தென்மராட்சி, ஜூலை 07

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகரை இடமாற்றம் செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை திங்கட்கிழமை தென்மராட்சி பிரதேசத்தில் கதவடைப்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப் படவுள்ளது.

"தென்மராட்சி மக்கள்" என்ற பெயரில் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கல்கியின் யாழ்ப்பாண ஞாபகங்கள் - 3

# தமிழின் இனிமைக்கு யாழ்ப்பாணம்!

## யாழ்ப்பாணத்துக்கு சேர். பொன்னம்பலம் இராமநாதன் வழங்கிய நன்கொடை இராமநாதன் கல்லூரி

- அனந்த பாலகிட்ணர்.

இராமநாதன் கல்லூரியின் நடைமுறைகளை இரண்டுமூன்று தினங்கள் கவனிக்க எமக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சென்னையிலும் பெண்களுக்கென அநேக கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றுக்கும் யாழ்ப்பாணத்தின் இராமநாதன் கல்லூரிக்குமிடையே ஒரு வித்தியாசம் உண்டு. இராமநாதன் கல்லூரி முற்றிலும் தமிழரின் நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டது.

தமிழரின் மதம், மொழி, கலை, கலாசாரம் என்பவற்றை நன்கு பேணும் வகையில் இக்கல்லூரியின் நடைமுறைகளை சேர். பொன்னம்பலம் இராமநாதன் அமைத்துள்ளார். காலை வேளையில் இக்கல்லூரியின் மேல் மாடியிலுள்ள பெரிய மண்டபத்தில் மாணவிகள் எல்லோரும் வந்து சேருகின்றார்கள். பின்னர் தேவாரம், திருவாசகம் என்பவற்றைப் பாடி, கற்பூர ஆராத்தி செய்கிறார்கள். பின்னர் அவர்களுடைய வகுப்புகளுக்கு செல்கிறார்கள். இதேபோல மாலையிலும் இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் வேறு சில கல்வி நிறுவனங்களுக்கும் நாம் போயிருந்தோம். அவற்றின் நடைமுறைகளை முழுவதுமாக எம்மால் பார்க்க முடியவில்லை. இருந்தபோதிலும், அனைத்து கல்வி நிறுவனங்களிலும் தமிழ் மணம் கமழ்வதை நாம் கண்டோம். தமிழ் என்ற சொல் இனிமை என்றே பொருள்படும் என்று தமிழபிமானிகள் கூறுவர். ஆனால், சென்னைவாசிகள் பேசுகின்ற தமிழை கேட்டால் தமிழின் இனிமையில் நிச்சயம் சந்தேகம் ஏற்படவே செய்யும். தமிழின் இனிமையை பூரணமாக அனுபவிக்க வேண்டுமானால் யாழ்ப்பாணத்துக்குச் செல்லுங்கள் என்றே கூறுவேன். முதன்முதலில் யாழ்ப்பாணத்தவரின் பேச்சைக் கேட்கும்போது ஏதோபோல தோன்றும். ஆனால், சற்றுக்கேட்டு பழகிவிட்டால் அதன் இனிமையில் லயித்துப்போய்விடுவோம். அவர்கள் பாவத்துடன் பேசுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தவர்கள் தமிழ் வார்த்தைகளை சிதைக்காமல் - வதைக்காமல் - பூரணமாக உச்சரித்துப் பேசுகிறார்கள். அவர்கள் பேசுவதைக் கேட்டால் பேசுகிறார்களா அல்லது புத்தகத்திலிருந்து வாசிக்கிறார்களா என்றே எண்ணத்தோன்றும். உடை விடயத்தில் கொழும்பில் எவ்வளவு தூரம் ஆடம்பரமாக இருக்கின்றதோ அவ்வளவு தூரம் யாழ்ப்பாணத்தில் எளிமையைக் காணலாம். எளிமையான உடையில் அனைவரையும் ஓரங்கட்டி விடும் ஒருவரை நாம் பார்த்தோம். அவர்தான் யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் காரியதரிசி ஹன்டி பேரின்பநாயகம்.

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடந்த கூட்டத்துக்கு இவர் தலைமை வகித்தார். அச்சமயம் அவர் மிக எளிமையாக வந்திருந்தமை எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. படிப்பும் ரசிகத்தன்மையும் பெரும்பாலும் சேர்ந்திருப்பதில்லை. படிப்பு அதிகமாக, ரசிப்புத்தன்மை சில சமயம் குறைந்துவிடுகிறது. அதிகம் படித்த அநேகர் தமது சொந்த சாமர்த்தியத்தைவிட வேறு எதனையும் ரசிக்க முடியாதவர்களாக போய்விடுகிறார்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் கல்வியறிவோடு ரசிகத்தன்மையும் அதிகமாக இருந்தமை எனக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் தந்தது.

சித்திரம், சங்கீதம், இலக்கியம், நகைச்சுவை என்பவற்றை அவர்கள் நன்றாகவே அனுபவித்து ரசிக்கிறார்கள். ஒரு பேச்சாளருக்கு உற்சாகமூட்டுவதை யாழ்ப்பாணத்திலன்றி வேறெங்கும் காணமுடியாது. நான் எதிர்பாராதவகையில் யாழ்ப்பாணத்தில் பல உரைகளை நிகழ்த்த வேண்டியிருந்தது. இறுதியாக நான் நிகழ்த்திய உரையின்போது தொண்டை கட்டிவிட்டது. எனது தொண்டை ஒரு சங்கீத வித்துவானின் சாரீரத்தைப்போல இருக்கின்றது என்று கூறினேன். இந்த நகைச்சுவை சபையிலிருந்தோருக்கு எப்படி புரியும் என்று நினைத்தேன். அடுத்த கணம் நான் நினைத்தது தவறு என்று எண்ணுமளவுக்கு சபையிலிருந்தோர் ஒரே நேரத்தில் வெகுவாகவே சிரித்தார்கள்.

திருமணங்களைப் பொறுத்தவரை யாழ்ப்பாண வரதட்சணை முறைகளுக்கு முன்பாக, தமிழக வரதட்சணை மண்டியிடவேண்டும். மணமகனின் அந்தஸ்துக்கு ஏற்ப ஆயிரக்கணக்கில் வரதட்சணை கேட்டு வாங்குகிறார்கள். ஆனால், தமிழகத்திலுள்ள வழக்கத்துக்கும் யாழ்ப்பாண வழக்கத்துக்குமிடையே நிறையவே வித்தியாசமுண்டு. அங்கே கொடுக்கின்ற பணம் பெண்ணைச் சேர்ந்தது. அதைப் புருஷன் ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே, அதை வரதட்சணை என்பதைவிட சீதனம் என்று கூறுவதே பொருத்தமானது. இதனால், பெண்கள் சொத்துடையவர்களாவதுடன், புகுந்த வீட்டில் கௌரவமும் பெறுகின்றனர். இதனை பெண்களுக்கு அநுகூலமான வழக்கம் என்றே கூறலாம். ஆனாலும், எத்தகைய நன்மையிலும் ஒரு பாதக தன்மையும் இருக்கும். இது ஓர் உலக இயல்பு. இதனால் காலாகாலத்தில் திருமணங்கள் நடப்பதுகூட தடைப்படுகின்றது.

பெண்களின் சமூக சேவையில் ஈடுபட்டோரில் மங்களம்மா அவர்களைக் குறிப்பிடலாம். இவர் சிறிது காலம் நடத்திய 'தமிழ் மகள்' என்ற பத்திரிகையை பலர் அறிந்திருக்கலாம். இவர் சிலகாலம் சென்னையில் இருந்தார். அப்போது அவரின் புதல்வி சங்கீதம், வீணை வாசிப்பு என்பவற்றில் தேர்ந்தவர் என்பது எனக்குத் தெரியும். அவர் மற்றுமொரு கலாரசிகனான நவரத்தினத்தை மணந்து, யாழ்ப்பாணத்தில் கலைத்துறை வளர்ச்சியில் ஆர்வம் காட்டி உழைத்து வருகின்றார் என்பதை அறிந்தபோது மகிழ்ச்சியாக இருந்தது.

யாழ்ப்பாண வாசிகள் இலங்கை அரசியல் விடயத்தில் வேற்றுமைப்பட்டிருக்கலாம். ஆனால், பாரத மாதாவிடம் வைத்துள்ள பக்தியில் ஒருமைப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். யாழ்ப்பாணத்தவர்கள் அனைவரும் பாரத நாட்டை தமது தாய் நாடாகவே கருதுகின்றனர். (தொ. கும்)

# குப்பை கொட்டப்படுவதை எதிர்த்து அல்லிப்பளை மக்கள் ஆர்ப்பாட்டம்!



கிளிநொச்சி, ஜுலை 07

குப்பை கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அல்லிப்பளை மக்கள் நேற்று எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்.

பச்சிலைப்பள்ளியின் - அல்லிப்பளை பிரதேசத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் கழிவுகள் கொட்டப்படுகின்றன. இவ்வாறு கொட்டப்பட்ட குப்பைகளுக்கு அண்மையில் தீ வைக்கப்பட்டது. இதனால், அல்லிப்பளை பிரதேசத்தில் பெரும் புகை பரவியதுடன், துர்நாற்றமும் பரவியது. இதனால், அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

இதனைக் கண்டித்தும் அந்தப் பகுதியில் குப்பை கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்று சனிக்கிழமை பளை பேருந்து நிலையத்திலிருந்து பேரணியாக சென்ற மக்கள் பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு கோரி மனு ஒன்றையும் கையளித்தனர். (ஐ-02)

# உரிய நேரத்தில் இளைஞர்களிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைப்போம்!

## தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார

கொழும்பு, ஜுலை 07

"தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தை கைப்பற்றியவுடன் இலங்கை பெரும் மாற்றங்கள் நடைபெறும். நாட்டின் அனைத்துத் துறைகளும் விஞ்ஞானபூர்வமாக கட்டமைக்கப்படும். இதே போன்று தொடர்ந்து வயதாகும் வரை அதிகாரத்தில் இருப்பதல்ல எமது நோக்கம். உரிய நேரத்தில் இளைஞர்களிடம் அதிகாரத்தை கையளித்துவிடுவோம்."

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க உள்ள அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றவுடன் பாராளுமன்றம் கலைக்கப்படும். அதன் பின் பாராளுமன்றத்தில் உள்ள ஊழல் மற்றும் நாசகார குழு விரட்டியடிக்கப்படும். அடுத்ததாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் மூலம் நாட்டின் அதிகாரம் புதிய குழுவுக்கு மாற்றப்படும்.

ஏன் தேசிய மக்கள் சக்தி நாட்டுக்குத் தேவை? எங்களுக்கு தனிப்பட்ட நலன்கள் இல்லை. நிலத்தை அபகரிக்கவோ, ஹோட்டல்களை வாங்கவோ, சாராய ஆலைகளை திறக்கவோ, மணல் கொள்ளையடிக்கவோ, எரிபொருள் நிலையங்களை வாங்கவோ தேவை இல்லை.

மக்களின் வளங்கள் மக்களுக்கானது. அதன் ஊடாக நாட்டை அபிவிருத்தி செய்வதே எமது நோக்கம். ஹோட்டல் கட்ட விரும்பும் ஹோட்டல் துறையினருக்கே சந்தர்ப்பம் அளிக்கப்படும். விவசாயம் செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

எரிபொருள் நிலையத்தை திறக்க விரும்பும் தொழிலதிபர்களுக்கு அந்த வாய்ப்புகள் வழங்கப்படும். இவ்வாறு துறைசார் சார்ந்தவர்களுக்கே அந்த வாய்ப்புகள் வழங்கப்படும். நாட்டை மீளக் கட்டியெழுப்ப நல்ல திட்டங்களை வகுத்து வருகிறோம். நாங்கள் வயதாகும்வரை அதிகாரத்தில் இருக்க மாட்டோம்.

சரியான நேரத்தில் எம் கையில் உள்ள அதிகாரத்தை புதிய தலைமுறை இளைஞர்களிடம் ஒப்படைத்து விடுவோம். ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் அதிகாரத்தை விட்டு இதை வெளியேற தயாராக இல்லை." என்றார். (ஐ)

# மோட்டார் சைக்கிள் திருடியவர் போதைப்பொருளுடன் கைது!

யாழ்ப்பாணம், ஜுலை 07

மோட்டார் சைக்கிளை திருடிய வழக்கில் சாவகச்சேரியில் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு அருகில் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரேமதிலக தலைமையிலான பொலிஸார் 24 வயதான சந்தேக நபரை சாவகச்சேரி பகுதியில் கைது செய்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும் ஒரு கிராம் 30 மில்லிகிராம் அளவான ஹெரோயினும் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றுக்கு வருகை தந்தபோது "வெளியே நின்ற மோட்டார் சைக்கிளை பார்க்க ஆசையாக இருந்தது. அதனால் அதனை திருடிச் சென்றேன்" என சந்தேக நபர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# வடமராட்சி விபத்தில் இருவர் காயம்!

வடமராட்சி, ஜுலை 07

வடமராட்சி கிழக்கு - செம்பியன் பற்று பகுதியில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதுண்ட விபத்தில் சிறுவன் ஒருவன் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை நிறைவடைந்த பின்னர் தனது துவிச்சக்கர வண்டியில் சகோதரனை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்றவர் சைக்கிளுடன் மோதுண்டார்.

இதில், மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் காயங்களுக்கு உள்ளாகினர். இருவரும் மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ஐ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை பாடத்திட்டத்தில் தொழில் முயற்சியாண்மை

## வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்க சஜித் புதிய யோசனை



கொழும்பு, ஜூலை 07

**எமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டுமானால் தொழில் முயற்சியாண்மையை பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளீர்க்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பிரபஞ்சம் தகவல் தொழில் நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 292 ஆவது கட்டமாக 11 இலட்சத்து 77,000 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் சிலவற்றை கொழும்பு, ஹோமாகம பொல் கசோவிட்ட, அம்பலாங்கொட சிறிபதி மகா வித்தியாலயத் துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற் றது. இந்த நிகழ்வில் சஜித் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எமது நாட்டின் பாடசாலை பாடத்திட்டம் தொழில் முயற் சியாண்மை, புதிய படைப்பாக் கம், புத்தாக்கம், புதிய சிந்தனை கள் குறித்து போதிக்கப்படா மையே எம்மால் புதிய அம்சங் களை இலக்கு வைத்துப் பய ணிக்க முடியாதிருப்பதற்கான காரணமாகும். பாடசாலை மாணவர்கள் தொழில் முயற் சியாண்மை குறித்து விழிப்பு ணர்வுடன் இருக்க வேண்டும். பாடசாலை மாணவர்கள் சிறந்த கல்வியுடன் பெரியவர்களாக சமூகத்துக்கு வரும்போது, அரசி யல்வாதிகளிடமிருந்தோ, அரசி டமிருந்தோ அல்லது தனியார் நிறுவனங்களிடமிருந்தோ வேலைகளை எதிர்பார்க்காமல் அவர்களது படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க சிந்தனைகள் மூலம் பிரகாசிப்பார்கள்.

எமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 சதவீத பங்களிப்பு நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவோரால் வழங் கப்பட்டு வருகிறது. இத்துறை யில் தொழில்முனைவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க முடி யும். இந்த நாடு கட்டியெழுப் பப்பட வேண்டுமானால், பொரு ளாதார வளர்ச்சியடைய வேண்டும், விரிவடைய வேண் டும். அனைவருக்கும் நன்மை பயக்கும் சௌபாக்கியத்தை நோக்கிச் செல்ல வேண்டும். பொருளாதார வளர்ச்சி பெரும் செல்வந்தர்களைச் சுற்றியிருக் கக்கூடாது. வளர்ச்சியின் பலன் கள் அனைவருக்கும் பகிர்ந்த ளிக்கப்பட வேண்டும்.

சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும். வளமான எதிர்கா லத்தை உருவாக்க ஐக்கிய மக் கள் சக்தி அர்ப்பணிப்புடன் செயல்படும்- என்றார். (எ)

# வாழ்க்கையைச் சீர்குலைக்காமல் உடன் பணிக்கு திரும்ப வேண்டும்

## பல்கலை. கல்விசாரா ஊழியர்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 07

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள இளைஞர் களின் வாழ்க்கையை மேலும் சீர்குலைக்காமல், அவர்களின் காலத்தை வீணடிக்காமல், அனைத்துப் பல்கலைக்கழகங்க ளின் கல்விசாரா ஊழியர்களை யும் உடன் கடமைக்கு சமுகம ளிக்குமாறு கேட்டுக்கொள்வ தாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராக வன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் இரண்டு மாத சம்பளம் மற்றும் ஏப்ரல் மாதத் துக்கான மேலதிக நேரக் கொடுப் பனவுகளை வழங்குவதற்கும், அவர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து, அவற்றை உதய செனவிரத்ன குழுவுக்கு சமர்ப்பித்து, 2025 வரவு - செல வுத் திட்டத்தில் உள்ளடக்குவ தாகவும் இராஜாங்க அமைச்சர் உறுதியளித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத் தில் வெள்ளிக்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டிலுள்ள 17 பல்க லைக்கழகங்கள் மற்றும் 19 ஒன் றிணைந்த பட்டப்பின் படிப்பு நிறுவனங்களின் 14, 600 கல்வி சாரா ஊழியர்கள் 65 நாட்களாக பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட் டுள்ளதால் முழு உயர் கல்வித்து றையும் முடங்கியுள் ளது. இந்த நாட்டின் எதிர்கா லத்தைப் பொறுப்பேற்கவிருக் கும் 2 இலட்சத்து 50,000 இளைஞர்க ளின் வாழ்க்கையைச் சீர்குலைந்து, அவர்களின் காலத்தை வீணடிப் பதுதான் இதன் துயரமான பிர திபலனாகும் என்றும் அவர் கூறி னார். (எ)

# யுக்திய நடவடிக்கையில் 777 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜூலை 07

நாடளாவிய ரீதியில் நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவ டைந்த கடந்த 24 மணித்தியா லத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் தொடர்பில் 777 சந்தேக நபர்கள் கைது செய் யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட சந்தேக நபர்களில் 52 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் 71 பேர் புனர்வாழ்வு நிலையங்க ளுக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளனர்.

இதேவேளை, கைது செய் யப்பட்ட நபர்களிடம் இருந்து 226 கிராம் 753 மில்லி கிராம் ஹெரோயின், 277 கிராம் 865 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள், 4,456 கிராம் 845 மில்லி கிராம் கஞ்சா மற்றும் 115 போதை மாத்திரைகள் என் பன பறிமுதல் செய்யப்பட்டன.

# 1,700 ரூபாய் சம்பளம் கிடைத்தால் மகிழ்ச்சி

## இராதாகிருஷ்ணன்

நுவரெலியா, ஜூலை 07

வர்த்தமானியில் அறிவிக்கப் பட்டதன் படி தோட்டத் தொழி லாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளம் கிடைத்தால் மகிழ்ச்சி என மலையக மக்கள் முன்னணி யின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான வேலுசாமி இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் வெள்ளிக் கிழமை நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

பெருந்தோட்டத் தொழிலா ளர்களின் மாதாந்த சம்பளத்தை ரூ. 1,700 ஆக அதிகரிப்பது தொடர்பில் தொழில் அமைச் சால் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித் தலை நடைமுறைப்படுத்துவ தைத் தடுத்து உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவொன்றை பிறப்பித்தது.

கம்பனிகளோடு எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடத்தாமல் வர்த்தமானி வெளியிட்டது ஒரு முட்டாள்தனமான செயல்பாடு. இது தோட்டத் தொழிலாளர் களை ஏமாற்றும் செயல்பாடா கவே உள்ளது.


இந்தச் சம்பள அதிகரிப்பு பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே எனது எங்கள் அனைவரினதும் விருப்பமாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# உகந்தையிலிருந்து சென்ற யாத்திரிகர்கள் கதிர்காமம் ஆலயத்தை சென்றடைந்தனர்!

கதிர்காமம், ஜூலை 07

உகந்தையில் இருந்து கதிர் காமத்துக்கான பாத யாத்தி ரையை ஆரம்பித்த யாத்திரிகர் கள் 5 நாட்கள் காட்டுவழியாக நடந்து வெள்ளிக்கிழமை கதிர் காமக் கந்தன் ஆலயத்தை சென்ற டைந்தனர்.

கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த கொடியேற்றத்தை முன்னிட்டு பக்தர்கள் தமது நேர்த்திக்கடனை செலுத்துவ தற்காக யாழ்ப்பாணம், தொண் டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் ஆலயம், திருகோணம லையில் உள்ள ஆலயங்கள், வெருகலம்பதி முருகன் ஆலயம், மட்டக்களப்பு மாமாங்கேஸ் வரர் ஆலயம், திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆல யம், பாணமை ஊடாக உகந்தை முருகன் ஆலயம், அங்கிருந்து காட்டுவழியாக சுமார் 55 கிலோ



மீற்றர் தூரம் ஆறுகள், குளங்க ளைக் கடந்து காட்டில் அமைந் துள்ள கபிலித்தை முருகன் மற் றும் வைரவர் ஆலயங்கள், செல் லக் கதிர்காமம் ஆகிய ஆலயங் களுக்கு சென்று தரிசித்துவிட்டு, அங்கிருந்து சுமார் 850 கிலோ மீற்றர் தூரம் நடந்து கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்குச் சென்று கொடியேற்றத்தில் கலந்துகொண்டு தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவது வழக்கம்.

இதனடிப்படையில் கதிர்கா மத்துக்கான உகந்தை காட்டுவ ழிப் பாதை கடந்த 30 ஆம் திகதி திறக்கப்பட்டது.

இதனையடுத்து, அங்கிருந்து சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற் பட்ட பக்தர்கள் சுமார் 5 நாட் கள் நடைபயணமாக சென்று கதிர்காமத்தை அடைந்தனர். (எ)

# இணையவழி மோசடிகள் குறித்து 5 மாதத்தில் 1,093 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 07

இந்த வருடத்தின் கடந்த 5 மாத காலப்பகுதிக்குள் இணை யவழி மோசடிகள் தொடர்பில் 1,093 முறைப்பாடுகள் கிடைக் கப் பெற்றுள்ளதாக இலங்கை கணனி அவசர செயல்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனு கல தெரிவிக்கையில்,

சமூக ஊடகங்கள் தொடர் பில் [illegible] 916 முறைப்பாடுகள் இக்காலத்தில் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவற்றில், சிறுவர்கள் தொடர் பில் குறிப்பாக பாலியல் துஷ்பி ரயோகச் சம்பவங்கள் தொடர் பில் இரண்டு மாத காலப்பகு திக்குள் 27 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இது தொடர்பில் தேசிய சிறு வர் பாதுகாப்பு அதிகார சபைக் குத் தகவல் வழங்கப்பட்டுள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய திகதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவுறுத்தினார் ஜனாதிபதி



கொழும்பு, ஜூலை 07

**உரிய திகதியில் தேர்தலை நடத்த வேண்டும் எனவும், அதற்காக தேர்தல்கள் ஆணையாளருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் விடயங்களை விளக்கியதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

நாரஹேன்பிட்டி, எல்விடிகல வீதியில் அமைந்துள்ள சிறீலங்கா ராமன்ய மகா நிகாயவின் தலைமையகத்துக்கு சென்ற ஜனாதிபதி, மகாநாயக்கர் மகுலேவே விமல தேரரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, ஜனாதிபதி மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடன் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பில் நாங்கள் இப்போது தனியார் கடன் வழங்குநர்கள் மற்றும் வர்த்தக கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடலை முடித்துள்ளோம். நாங்கள் செலுத்த வேண்டிய கடனில் இருந்து சுமார் 8 பில்லியன் டொலர்களை குறைக்க முடிந்துள்ளது என்ற நற்செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோன்று, கடனைச் செலுத்துவதற்கு 4 வருட கால அவகாசம் மற்றும் கடனை முழுமையாகச் செலுத்த 2043 வரை கால அவகாசம் பெறவும் முடிந்துள்ளது. இந்த நலன்களைப் பயன்படுத்தி இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தைப் பலப்படுத்த எதிர்பார்க்கின்றோம். அதற்காக, அடுத்த இரண்டு வருடங்களில் திட்டமிட்ட வகையில் செயல்பட்டால் மீண்டும் கடன் பெறாத நிலைமைக்கு நாட்டைக் கொண்டு செல்ல முடியும்.

உரிய திகதியில் தேர்தலை நடத்த வேண்டும் என்று தேர்தல் கள் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளேன். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாக குறைக்க நான்தான் பரிந்துரைத்தேன். இன்று இந்நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இதன்படி தற்போது அஸ்வெசும வேலைத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது- என்றார். (எ)



# வீதியை விட்டு விலகி சுவரில் மோதிய பஸ்

## ஐவர் மருத்துவமனையில்

பதுளை, ஜூலை 07

பெத்தேவெலவிலிருந்து பண்டாரவளை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

பதுளை, எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்பே பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஐவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்த பேருந்தில் 18 பேர் பயணித்த நிலையில் அவர்களில் ஐவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காயமடைந்தவர்கள் தெமோதரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வெடிபொருட்களுடன் ஒருவர் சிக்கினார்!

கண்டி, ஜூலை 07

கண்டியில் ஹசலக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொரயாய பகுதியில் வெடிபொருட்களுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரிடமிருந்து 2 கிலோ கிராம் அமோனியம் நைட்ரேட்டு மற்றும் 8 டெட்டனேட்டர் குச்சிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# போதைப்பொருள் விற்றவர் 14 நாட்கள் விளக்கமறியலில்

கல்முனை, ஜூலை 07

பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்களுக்கு நீண்ட காலமாக போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்த நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

விசேட தகவல் ஒன்றையடுத்து அம்பாறை பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜே. எஸ். கே. வீரசிங்க வழிநடத்தலில், பொலிஸ் குழுவினர் மருதமுனை கடற்கரை பிரதேசத்தில் சிவில் உடையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது ஆலா என்ற பறவையின் பெயர் கொண்ட 39 வயதுடைய நபரை பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர்.

இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்ட நபரின் உடமையில் இருந்து 11 கிராம் 300 மில்லி கிராம் கஞ்சாவை மீட்டனர்.

பின்னர் மறுநாள் வெள்ளிக்கிழமை சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிமன்ற நீதிவான் எம். எஸ். எம். சம்சுதீன் முன்னிலையில் முற்படுத்திபோது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். குறித்த ஆலா என்ற பறவையின் பெயர் கொண்ட இந்த சந்தேக நபர் இரண்டாவது தடவையாக போதைப்பொருள் விற்ற குற்றச்சாட்டில் கைதாகியுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, 22 வயதுடைய இளைஞன் ஒருவரும் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# இலங்கைக்கான விமான சேவைகளை அதிகரிக்கிறது கட்டார் விமான சேவை

கொழும்பு, ஜூலை 07

கொழும்பை நோக்கிப் பயணிக்கும் தனது விமான சேவைகளை 5 இலிருந்து 6 ஆக அதிகரிப்பதாக கட்டார் ஏர்வேஸ் விமான சேவை அறிவித்துள்ளது.

இவ்வாறு அதிகரிக்கப்படும் 6 ஆவது விமான சேவையானது எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளது.

30 வணிக வகுப்பு இருக்கைகள் மற்றும் 281 சாதாரண வகுப்பு இருக்கைகள் கொண்ட போயிங் 787 வகை விமானத்தை கொழும்புக்கான சேவைகளுக்கு கட்டார் ஏர்வேஸ் பயன்படுத்துகிறது.

இந்த விமான சேவை உலகெங்கிலும் உள்ள 170 நாடுகளுக்குப் பயணிகளை இணைக்கும் வகையில், கட்டார் ஏர்வேஸ் மொத்தம் 42 வாராந்திர விமானங்களை கொழும்புக்கு இயக்கும்.

கட்டார் ஏர்வேஸ் சேவையின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான முகாமையாளர் ஜொனாதன் பெர்னாண்டோ கூறுகையில்,

கொழும்புக்கும் கொழும்பிலிருந்தும் கட்டார் ஊடான தொடர்புகளை அதிகரிப்பதற்காக இந்த மேலதிக சேவையை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த விமான சேவை அதிகரிப்பானது பயணிகளுக்கு சிறந்த பயண அனுபவத்தை வழங்குவதில் எங்களின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

புதிய விமான சேவைகள் உலகின் சிறந்த விமான நிலையமான கட்டாரின் ஹமாத் சர்வதேச விமான நிலையம் ஊடாக மத்திய கிழக்கு, ஐரோப்பா, ஆபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளுக்கு செல்வதற்கான வசதிகளை வழங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஐஸ் மற்றும் போதை மாத்திரை விற்பனை செய்த யுவதி கைது!

கொழும்பு, ஜூலை 07

ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகள் விற்பனையில் ஈடுபட்ட யுவதி ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

மொறட்டுவை லுனாவ பகுதியில் விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்த யுவதி கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த வீட்டிலிருந்து 80 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 500 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட யுவதி மேலதிக விசாரணைகளுக்காக மொறட்டுவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# வரவேற்பு வளைவு வழக்கு இடைக்கால தடை நீடிப்பு

சம்மாந்துறை, ஜூலை 07

வீரமுனை கிராமத்துக்கான நுழைவாயில் வரவேற்பு வளைவு அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீண்டும் எதிர்வரும் ஒகஸ்ட் 21 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரமுனை வரவேற்பு வளைவு அமைப்பதற்கான பணிகள் மக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான தடை உத்தரவொன்றை கடந்த 15 ஆம் திகதி சம்மாந்துறை பொலிஸார் நீதிமன்றில் பெற்றிருந்தனர். இது தவிர இரண்டாவது முறையாக சம்மாந்துறை பிரதேச சபையால் வழக்குத் தாக்கல் சில தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் மேற்கண்டவாறு எதிர்வரும் ஒகஸ்ட் 21 வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வீரமுனையில் வரவேற்பு வளைவு அமைப்பதான நிகழ்வானது இன முரண்பாட்டை இன வன்முறையை ஏற்படுத்தும் என கடந்த வழக்குத் தவணைகளில் சம்மாந்துறை பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டு குறித்த தடையுத்தரவு பெறப்பட்டிருந்தது.

மேற்குறித்த வழக்கு வெள்ளிக்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி டி. கருணாகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது மன்றில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்ட வீரமுனை சிந்தாயாத்திரைப்பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் சமூகச் செயல்பாட்டாளர்கள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது, இரு சாராரின் விண்ணப்பங்கள், சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதிவான் குறித்த வழக்கை ஒத்திவைத்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.07.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பாராளுமன்ற குழுத் தலைவர் யார்?

இரா. சம்பந்தனின் இடத்துக்கு அவருக்கு அடுத்தபடியான வாக்குகளை பெற்ற குகதாசன் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். அதுதான் தேர்தல் சட்டம். இந்த விடயத்தில் கட்சிகள் தலையீடு செய்ய முடியாது. ஆனால், தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்திருக்கும் கருத்துகள் தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இதேவேளை, தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. ஒன்றில் மாவை அதனை தடுமாற்றத்தில் குறிப்பிட்டாரா அல்லது விடயங்களை சரியாகப் புரிந்து கொண்டுதான் கூறினாரா?

சம்பந்தனின் மறைவை தொடர்ந்து திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்படவுள்ள குகதாசனை கூட்டமைப்பின் தலைவராக நியமிக்கப்போவதாக மாவை குறிப்பிட்டிருந்தார். முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒன்றில்லை. அந்த அடிப்படையில் நோக்கினால் மாவை விடயங்களை சரியாகப் புரிந்துகொள்ள முடியாதவராக இருக்கின்றார். என்னும், முடிவுக்கே ஒருவர் வரநேரிடும். ஒருவேளை அவர் பாராளுமன்றக் குழுவின் தலைவர் தொடர்பில் பேசுகின்றார் என்றால் - அதற்கும் குகதாசனுக்கும் தொடர்பில்லை. அதற்கான தகுதிநிலையுடையவர்கள் பலர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றனர். தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் குகதாசன் ஒரு பாலகர்.

பாராளுமன்றக் குழுவின் தலைவராக நியமிக்கப்படுபவர் அனுபவத்தின் அடிப்படையிலும் - அதேவேளை, அதிக பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடனும்தான் தெரிவாக முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய காலத்தில் அனைத்து கட்சிகளின் சம்மதத்துடன்தான் திருவாளர் சம்பந்தன் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவராக தெரிவானார்.

ஆனால், கூட்டமைப்பு உடைவுற்ற பின்னரும்கூட சம்பந்தனை அந்தப் பொறுப்பிலிருந்து விலகுமாறு பங்காளிக் கட்சிகள் கோரவில்லை. பெருந்தன்மையுடனும் - சம்பந்தனின் அனுபவத்தை கருத்தில் கொண்டும் கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் தொடர்ந்தும் தன்னை அடையாளப்படுத்துவதை அவர்கள் எவருமே எதிர்க்கவில்லை. ஆனால், இப்போது நிலைமைகள் அப்படியில்லை.

சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்றபோதே கூட்டமைப்பின் பேச்சாளர் பொறுப்பை தங்களிடம் ஒப்படைக்குமாறு பங்காளிக் கட்சிகளின் ஒன்றான ரெலோ கோரியிருந்தது. அதற்கு சம்பந்தனும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஆனாலும், பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை தமிழ் அரசு கட்சியிடம் இருந்த காரணத்தால் இறுதி முடிவெடுக்க முடியாமல் போனது. தற்போது நிலைமைகள் தலைகீழாகியுள்ளன.

தற்போதைய நிலையில் விட்டுக் கொடுப்பின் அடிப்படையிலும் - அனுபவத்தின் அடிப்படையிலும் பொருத்தமான ஒருவரை பாராளுமன்ற குழுவின் தலைவராக நியமிக்க வேண்டும். தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் நீண்ட அனுபமுள்ளவர்கள் என்று பார்த்தால் முதலில் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்தான் அனுபவத்தில் மூத்தவர். வயதில் மூத்தவராக தர்மலிங்கம் சித்தார்த்தன் இருந்தாலும்கூட, கோவிந்தன் கருணாகரம் 1989இல் பாராளுமன்றம் சென்றவர். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் பாராளுமன்ற குழுக்களின் தலைவர் பொறுப்புக்குரிய கட்சியாக ரெலோவே இருக்கின்றது. அது யார் என்பதை அவர்களின் கட்சி தீர்மானிக்க முடியும்.

இந்த முடிவை இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் சரியானது.

## வவுனியா பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் கறுப்புக்கொடி போராட்டம்

வவுனியா, ஜூலை 08



வவுனியா பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று கறுப்பு உடை அணிந்தும் கறுப்புக் கொடிகளை ஏந்தியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில் சத்யாகிரக போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியா பல்கலைக்கழகத்தில் அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்று வரும் நிலையில் துணை வேந்தர்கள் தமது கோரிக்கைகள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு எவ்வித தகவல்களையும் தமது சார்பில் வெளியிடவில்லை என்பதை கண்டித்து நேற்றைய தினம் கறுப்புக் கொடி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பல்கலைக் கழகத்தின் வீதியோரங்களிலும் கறுப்புக் கொடிகளை பறக்க விட்டு தமது எதிர்ப்பை அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## தலைமன்னாரிலிருந்து மூவர் தமிழகம் சென்றனர்!

இராமேஸ்வரம், ஜூலை 07

இலங்கையில் இருந்து தனுஷ்கோடிக்கு சென்ற 2 குழந்தைகளும் தாயாரும் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தலைமன்னார் பகுதியை சேர்ந்த யோக வள்ளி (வயது 34), அவரின் குழந்தைகள் அனுஜா (வயது 08), மிஷால் (வயது 05) ஆகிய மூவர் தலைமன்னாரிலிருந்து பைபர் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி கடற் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை வந்து இறங்கியுள்ளனர்.

தகவலறிந்து அங்கு வந்த கடல் கண்காணிப்பு பொலிஸார் தனுஷ்கோடி கடற்கரை பகுதியிலிருந்து விசாரணைக்காக மூன்று பேரையும் மண்டபம் பொலிஸ் காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

விசாரணையில், யோக வள்ளி விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அகதி முகாமில் பிறந்தவர் என்றும், 15 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை திரும்பியவர் எனவும் அங்கே திருமணம் முடிந்து கணவரை பிரிந்து வாழ்ந்ததும் தெரிய வந்தது.

இரண்டு குழந்தைகளுடன் இலங்கையில் வாழ முடியாத சூழலில் வெம்பக்கோட்டை முகாமில் அவரது தாயாருடன் சேர்ந்து வாழ்வதற்காக மீண்டும் அவர் தமிழகம் வந்தார் என்றும் தெரிய வந்துள்ளது. விசாரணைக்குப் பின்னர் மூவரையும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் பொலிஸார் ஒப்படைத்தனர்.

(ஐ)

## நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

தமிழிலிருந்து மறைந்த ஏ. ஜே. கனகரத்தினவால் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்ட 40 சிறுகதைகளின் தொகுப்பான "தி சிறீ லங்கன் லிற்ரறி லாண்ட்ஸ்கேப்" நூல் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கும் இலக்கம் 92, கண்டி வீதியில் அமைந்துள்ள "கலம்" அமைப்பில் நடைபெறவுள்ளது.

பத்மபாப ஐயரால் தொகுக்கப்பட்ட இந்த நூல் வெளியீட்டுக்கு ம. நிலாந்தன் தலைமை வகிப்பார். பதிப்பாளர் உரையை எம். பௌசர் ஆற்றுவார். மூல சிறுகதைகளில் இருந்து ஒரு பகுதியை செல்வி சோகினா கிருபாகரனும் அதனுடைய மொழிபெயர்ப்பை ஜெயக்குமார் ஜாதுசனும் வழங்குவர்.

நூல் அறிமுக உரையை கலாநிதி பாக்கியநாதன் அகிலன், கலாநிதி மகேந்திரன் திருவரங்கன் ஆகியோர் ஆற்றுவர். (ஐ)

## மருத்துவ ஆலோசனைகளுக்காக 1305 எண்ணை அழைக்க முடியும்!

இந்தியாவின் பிரபல தனியார் மருத்துவமனை குழுமமான அப்பலோ நாட்டின் செரண்டிப் மருத்துவமனை குழுமத்துடன் இணைந்து சுகாதார மருத்துவ சேவைகளுக்கான உதவி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கமைய 1305 என்ற இலக்கத்துக்கு அழைத்து சகல விதமான மருத்துவ ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு, கிங்ஸ்பெரி ஹோட்டலில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதிகளாக சிவில் விமான சேவைகள் மற்றும் கப்பற் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தொடு திரையால் என்னை தொந்தரவு செய்ய முடியாது!’

மனநல வழிகாட்டுதல்
டாக்டர் மோகன வெங்கடாசலபதி

“என்னன்னு தெரியல கொஞ்ச நாளா யார் கிட்டயும் சரியா பேச மாட்டேங்கிறான்... ரூமுக்குள்ளே போய் தனியா கதவைச் சாத்திக்கிறான்” ; “என் மூக்கு சரியாயில்ல உடம்பு குண்டா இருக்கு எல்லாரும் போட்டோ பாத்துட்டு கிண்டல் பண்றாங்க.. எனக்கு மூக்கை மாத்திக் கொடும்மான்னு அழுறா சார் என் பொண்ணு” - இப்படிப்பட்ட பிரச்சினைகளுடன் வரும் பள்ளி குழந்தைகள் பலரை என்னை போன்ற மன நல மருத்துவர்கள் தினந்தோறும் சந்தித்து கொண்டிருக்கிறோம். மேற்சொன்ன சிக்கல்களுக்கும் இளையோரின் சமூக ஊடக பயன்பாட்டுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது.

மூளையில் சுரக்கும் டொபமின் (dopamine) வேதிப் பொருளும் மூளையின் சில பகுதிகளும் பங்கெடுப்பதன் மூலம் மது முதலான போதைப் பழக்கங்களுக்கு அடிமை ஆகிறோம். அதற்குச் சற்றும் குறைந்ததில்லை சமூக ஊடகம். அதனால்தான் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அதிலிருந்து மீண்டு வரச் சிரமப்படுகிறோம். ஸ்மார்ட்போனை பிடுங்கினால் குழந்தைகளுக்கு வரும் கோபத்தைக் கூர்ந்து கவனியுங்கள், புரியும். விருப்பக் குறிகள் விழவேண்டும், நமது சேனல் பரபரப்பாக வேண்டும், அதன் மூலம் கோடி கோடியாக வேலைக்குச் செல்லாமலே சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தில் எத்தனை இளைஞர்கள் யூடியூப் போன்றவற்றில் பதிவிடுவதற்காக நேரத்தையும் பணத்தையும் செலவிட்டு ரிஸ்க் எடுக்கிறார்கள்.

**‘நோ’ சொல்லும் நாடு:**

*13 முதல் 18 வயது வரையிலான சிறார்களை எடுத்துக் கொண்டால் ஒரு நாளைக்கு 6இலிருந்து 9 மணி நேரம் வரை சமூக ஊடக பயன்பாட்டில் செலவிடுகின்றனர் என்கிறது புள்ளி விவரம். பிரான்ஸ் நாட்டில் இப்பிரச்னை கைமீறி போனதால் அந்நாட்டு அரசு ஆய்வுக்குழு நியமித்தது. அந்த குழு வெளியிட்ட ஆய்வறிக்கையில் இடம் பெற்ற முக்கிய பரிந்துரைகள்:*



*13 வயதுவரை குழந்தைகள் ஸ்மார்ட்போன்களை அண்டவே கூடாது.*

*18 வயதுக்குட்பட்டவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. குறிப்பாக டிக்டாக், ஸ்நாப் சாட் மற்றும் இன்ஸ்டாகிராம் கூடவே கூடாது. இந்தப் பரிந்துரைகள் விரைவில் சட்டமாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்று பிரான்ஸ் உஷாரானது போல் நாளை எல்லா நாடுகளிலும் நடக்கலாம்.*

தொழில்நுட்பத்தின் அடுத்த அடுத்த வளர்ச்சியென்பது மென்மேலும் அதனை நாம் பயன்படுத்த தூண்டும் வகையில்தான் வடிவமைக்கப்படும். அதைப் பற்றி எந்த பன்னாட்டு நிறுவனங்களும் கவலைப் படப்போவதில்லை. நம் பிள்ளைகளின் மனநலன் மற்றும் உடல்நலன் பற்றி நாம்தான் கவலை கொள்ள வேண்டும்.

**தடுக்க வழி உண்டா?**

குழந்தைகள் எதையும் தாமாக செய்வதில்லை. பெற்றவர்களும் மற்றவர்களும் செய்வதைதான் அவர்களும் செய்கின்றனர். மாலை அனைவரும் வீட்டில் கூடும்போது போன் பார்ப்பதை தவிர்க்க வேண்டும். அதிலேயே மூழ்கிவிட்டு குழந்தைகளையும் அந்நியப்படுத்தும் தவறை பெற்றோர் செய்யலாகாது.

எத்தனையோ நல்ல விஷயங்களுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தலாம். தொலைந்த நட்பைப் புதுப்பிக்க, அரிதான நம் திறமையை வெளிச்சம் போட்டுக் காட்ட, நியாயமான காரணத்திற்காக நிதி திரட்ட, ஏதேனும் உதவி வேண்டியவர்களுக்கு அதை கிடைக்கச் செய்ய எனப்பலவாறு நல்ல செயல்களுக்கும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தலாம்.

சமூக ஊடகப் பயன்பாட்டின் நன்மை தீமைகளைக் குழந்தைகளும் அறியச் செய்ய வேண்டும். தொடுதிரையும் இணையமும் நம்மை அடிமைப்படுத்தி மன நோயாளியாக்கும் வல்லமை பெற்றவை என்பதைப் பள்ளிகள் முதல் பக்கத்து வீடுவரை உள்ள குழந்தைகளுக்குத் தெரியப்படுத்தி ஒரு விழிப்புணர்வு இயக்கமாகவே எடுத்துச்




செல்ல வேண்டும்.

எந்தத் தொடு திரையாலும் என்னைத் தொந்தரவு செய்ய முடியாது என்ற தன்னம்பிக்கை என்னும் இரும்புத்திரையைத் தம்மைச் சுற்றிக் குழந்தைகள் போட்டுக் கொள்ள வேண்டும். அதற்கு பெற்றோர் முதல் அரசாங்கம்வரை இணைந்து செயலாற்ற வேண்டிய நேரம் வந்து விட்டது.

## இந்தவார ராசிபலன் 07.07.2024 - 13.07.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 23
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் குடும்பத்தில் பல புதிய திருப்பங்கள் ஏற்படும். உங்கள் உடன் பிறப்புக்கு இது வரை தடைப்பட்டு வந்த காரியங்கள் கை கூடிவரும். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். மனைவிக்கு எதிர்பாராத விதமாக சொத்துக்களோ, பணவரவு ஏற்படும். தெய்வ வழிபாடுகள், நேர்த்தி கடன்களை நிறைவேற்ற உசிதமான காலம் ஆகும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எடுத்த முயற்சிகள் அனைத்திலும் முன்னேற்றம் அடைவீர்கள். எதிர்பார்த்த அளவு போதுமான வருமானங்கள் கிடைக்கும். நல்ல நண்பர்களின் சேர்க்கை ஏற்பட்டு அவர்களால் ஆதாயம் அடைவீர்கள். விருந்தினர்களுடன் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். அரசு ஆதாயங்களால் தொழில் வழியில் முன்னேற்றம் ஏற்படும். கவனக் குறைவால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரலாம். கணிசமான தொகை கள் கைக்கு வந்து திடீர் மகிழ்ச்சியில் ஆழ்த்தும். நீங்கள் ஈடுபடும் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிட்டும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். முன்பின் தெரியாதவர்கள் கூட உங்களுக்கு உதவ முன் வருவார்கள். மேடைப் பேச்சாளர்கள் அவர்களின் பேச்சு வன்மையால் வருமானம் அதிகரிக்கும். புதிய வியாபார தொடர்புகள் மூலம் இலாபம் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும், பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள். திட்டமிட்டபடி புதிய விரிவாக்கங்கள் செய்து முடிப்பீர்கள். அதன் காரணமாக வருவாய் ஓரளவு அதிகரிக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீடு, மனை ஆகியவை வாங்கும் யோகம் ஏற்படும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். பொறுமையைக் கடைப் பிடிப்பது நல்லது. பங்குச்சந்தை விவகாரங்களில் ஆலோசித்து இறங்குவது நல்லது. நெடுந்தூரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. கொதிக்கும் சட்டியில் இருந்து தப்பிக்க, கொழுந்துவிட்டு எரியும் தீயில் குதித்து விடாதீர்கள். வீட்டில் மனைவியிடம் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் சினிமா, கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் எனப் பொழுது மகிழ்ச்சியாக கழியும். தூரதேசத்தில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வர மனமகிழ்ச்சி ஏற்படும். சோம்பல் காரணமாகச் சுறுசுறுப்பற்ற நிலை ஏற்படும். ஆயினும், எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை ஆன்மிக காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். வீட்டில் அமைதியை நிலைநாட்ட வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். எதிர்பார்த்த இடங்களிலிருந்து பணவரவு கிடைக்கும். உறவுகள் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். அரசு வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைப்பது வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வீட்டில் ஏற்படும் குழப்பங்கள் காரணமாக கோபமும், உணவின் மீது வெறுப்பு ஏற்படலாம். பெருகும். புதிய தொழிலாளர் சேர்க்கை காரணமாக தொழிலில் எதிர்பார்ப்புக்கு மேல் உற்பத்தி பெருகும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் நீங்கள் விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும், ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகளுக்காக எதிர்பார்க்கப்படும் வங்கிக் கடன் உதவிகள் தாமதத்திற்கு பின்னர் கிடைக்கும். அவர்களை அனுசரித்து செல்வது நல்லது. திட்டமிடப்பட்ட செயல்களில் பிறரால் தடைகள் ஏற்படலாம். பொறாமை கோபங்களை தவிர்ப்பது நல்லது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பெரியவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது, நல்ல முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். தெய்வீக கைங்கர்யங்கள் ஆர்வம் ஏற்பட்டு தான தர்மங்கள் செய்ய முற்படுவார்கள். அனைத்துப் பணிகளும் மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். தாயாரின் அனுகூலமான வார்த்தைகள் உற்சாகம் அளிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் அனைத்து வசதிகளும் இன்பமும் ஏற்படும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பால் உயர்வு ஏற்படும். அனைவரையும் கவரும் வண்ணம் சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். தன வருமானம் அதிகரிப்பதால் அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக இருக்கும். அதற்கேற்ப செலவினங்களும் கூடும். செய்தொழில், வியாபாரம் எதுவானாலும் புதிய திட்டங்கள் தீட்டுவது மூலம் அதிக இலாபங்களை அடைவீர்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். வீடு வாங்கும் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பலவழிகளிலும் பணவரவுகள் அதிகம் கிடைக்கும். தொழிலில் புதிய விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டியது வரும். வாடிக்கையாளர்களை கவர புதிய பரிசுத் திட்டங்களை அறிவிப்பீர்கள். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பெண்களின் வாழ்க்கையில் துன்பங்கள் மறைந்து, முன்னேற்றம் ஏற்படும். கற்பனை வளம் பெருகும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பல வகையான உயரக வாகன வசதி அமையும். கணவன், மனைவி இடையே மிகுந்த ஒற்றுமை ஏற்பட்டு சந்தோஷம் நிலவும். அலங்காரப் பொருட்கள் மற்றும் வாசனை திரவிய வியாபாரங்களில் அதிக இலாபம் காணலாம். அரசுப் பணியாளர்கள், அதிகாரிகள் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். மாணவர்கள் கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். வியாபாரிகளுக்கு அவர்கள் எதிர்பார்த்த படி வங்கிக் கடன்கள் சிரமமின்றி கிடைக்கும். பணியில் முழுக் கவனம் செலுத்துங்கள். ஏனெனில், நீங்கள் உயிரைக் கொடுத்து உழைத்தாலும், மேலதிகாரி அதில் ஏதாவது குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அரசியலில் சம்பந்தனின் பாத்திரம்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இறுதியாக எஞ்சியிருந்த முதுபெரும் இலங்கை தமிழ் அரசியல் தலைவரும் கடந்த வாரம் இவ்வுலகில் இருந்து விடைபெற்றுவிட்டார். கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலுமாக ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்துக்கு தன்னை அர்ப்பணித்தவர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள்.

அவர் மீதான சகல விமர்சனங்களுக்கும் அப்பால், சிங்கள தலைவர்களினதும் சர்வதேச சமூகத்தினதும் மதிப்புக்குரியவராக இறுதிவரை சம்பந்தன் விளங்கினார். அந்த வகையில் எளிதில் நிரப்பமுடியாத ஒரு வெற்றிடத்தை அவரது மறைவு ஏற்படுத்தியிருக்கிறது. அவரது அரசியலை விமர்சிப்பவர்களும் கூட இதை ஏற்றுக்கொள்வார்கள்.

1977 ஜூலை பொதுத்தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் சார்பாக திருகோணமலை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான சம்பந்தன், கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் காலஞ்சென்ற தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியபோதிலும், 2001 ஆம் ஆண்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக வந்த பின்னரே தமிழர்களின் மிதவாத அரசியலின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டார்.

தாங்களே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று உரிமை கோரிய விடுதலை புலிகளை ஆதரித்த தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் 2009 ஆம் ஆண்டில் உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பிறகு தமிழர் அரசியலின் தலைமைத்துவம் இயல்பாகவே வந்துசேர்ந்தது. புதிய சூழ்நிலைகளின் கீழ் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் வரலாற்று முக்கியத்துவ கடமை கூட்டமைப்புக்கு இருந்தது.

சம்பந்தன் பல தசாப்தகால அரசியல் வாழ்வைக் கொண்டிருந்தாலும், கடந்த 15 வருடகாலமாக அவரின் தலைமைத்துவத்தின் கீழ் தமிழர் அரசியல் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வந்தது என்பதே அவரின் அரசியல் மரபாக வரலாற்றில் நினைவு கூரப்படும் என்பதில் சந்தேகமில்லை.

போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழர் அரசியலை வழிநடத்துவதில் கூட்டமைப்பு கடைப்பிடித்துவந்த கொள்கைகளுக்கும் அணுகுமுறைக்குமான முழுப்பொறுப்பையும் சம்பந்தன் மீது சுமத்திவிட முடியுமா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

விடுதலை புலிகள் இயக்கம் போரில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழ் அரசியல் சமுதாயம் படுமோசமாகப் பலவீனப்பட்டிருந்த சூழ்நிலைகளின் கீழ் அதுவும் குறிப்பாக போர்வெற்றிக் களிப்பில் குதூகலித்துக் கொண்டிருந்த சிங்கள அரசியல் சமுதாயத்துடனேயே சம்பந்தன் தமிழர் பிரச்சினையைக் கையாள வேண்டியிருந்தது.

ஆனால், அவர் தமிழர்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளைப் பொறுத்தவரை, அடிப்படைக் கோரிக்கைகளில் விட்டுக் கொடுப்புக்களைச் செய்யாமல் அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அதேவேளை, தமிழ் மக்களின் சமகால நிலையை உணர்ந்தவராக உணர்ச்சிவசமான சுலோகங்களை உயர்த்திப்பிடித்து நடைமுறைச் சாத்தியமற்ற அரசியல் பாதையை காட்டுவதற்கு ஒருபோதும் முயன்றதில்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு சமஷ்டி அடிப்படையிலான ஆட்சிமுறையே என்ற நிலைப்பாட்டில் சம்பந்தன் உறுதியாக நின்ற அதேவேளை நிரந்தரத் தீர்வை நோக்கிய பயணத்தில் இடைக்கால ஏற்பாடாக அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசாங்கங்களை இடையறாது வலியுறுத்திவந்தார். சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்புகளின் போதும் தனது இந்த நிலைப்பாட்டை அவர் தெளிவுபடுத்த தவறியதில்லை.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படாவிட்டால் வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வொன்றைக் கோருவதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கிறது என்று கூறுவதையும் சம்பந்தன் வழக்கமாகக் கொண்டிருந்தார். மரணமடைவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் வீரகேசரி வாரவெளியீட்டுக்கு வழங்கிய நேர்காணலிலும் அதை அவர் கூறியிருந்தார். அதை எவ்வாறு அடைவது என்பது குறித்து ஏதாவது மூலோபாயம் அவரிடம் இருந்ததா இல்லையா என்பது வேறு விடயம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் விடயத்தில் சம்பந்தன் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் மீது அளவுகடந்த நம்பிக்கையை வைத்திருந்தார். இலங்கை அரசாங்கம் மீது சர்வதேச சமூகம் நெருக்குதலைப் பிரயோகிக்கவேண்டும் என்பதும் அவரது இடையறாத கோரிக்கையாக இருந்து வந்தது.

1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை காரணமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதில் இந்தியாவுக்கு ஒரு பெரிய கடப்பாடு இருக்கிறது என்று இந்திய தலைவர்களையும் இராஜதந்திரிகளையும் சந்திக்கும் வேளைகளில் எல்லாம் சம்பந்தன் வலியுறுத்தினார். அதேவேளை சிங்கள மக்களின் ஆதரவு இல்லாமல் அரசியல் தீரவைக் காண்பது சாத்தியமில்லை என்பதும் அவரின் உறுதியான நம்பிக்கையாக இருந்தது.

அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களுடன் ஒப்பிடும் போது சிங்கள சமூகத்தின் கடுமையான வெறுப்புக்கு உள்ளாகாத ஒரு மிதவாத தமிழ்த் தலைவராக சம்பந்தன் இறுதிவரை விளங்கினார். அரசியல் தீர்வைப் பொறுத்தவரை முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகளுக்கு உரிய இடம் கொடுக்கப்படவேண்டும் என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார்.



**உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பினானரான காலப்பகுதியில் இலங்கை தமிழர் அரசியலை வழிநடத்துவதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கடைப்பிடித்துவந்த சகல கொள்கைகளுக்கும் அணுகுமுறைகளுக்குமான முழுப்பொறுப்பையும் சம்பந்தன் மீது சமத்திவிட முடியுமா?**

தனது காலத்தில் இனப்பிரச்சினைக்கு பயனுறுதியுடைய அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் சம்பந்தனுக்கு இருந்திருக்கக் கூடும். அவரின் தலைமுறையைச் சேர்ந்த பல தமிழ்த் தலைவர்களைப் போன்றே தமிழ் மக்களுக்கு அமைதியானதும் கௌரவமானதுயான வாழ்வை உறுதி செய்யக்கூடிய அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லையே என்ற கவலையுடனேயே சம்பந்தனும் இவ்வுலகில் இருந்து விடைபெற்றிருக்கிறார்.

பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகளிலும் வெளியில் அரசாங்க தலைவர்களுடனும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளிலும் சம்பந்தன் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு பிறகு இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து வரிசைக் கிரமமாக விளக்கம் அளிப்பது சம்பந்தனின் வழக்கமாக இருந்தது.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பதவிக்காலத்தில் 1991 ஆண்டில் நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்க தலைமையிலான தெரிவுக்குழு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவியில் இருந்தபோது 2000 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு யோசனைகள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சி பிரதிநிதித்துவக் குழுவின் யோசனைகள், மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை ஆகியவற்றை சம்பந்தன் தவறாது குறிப்பிடுவார்.

சமாதான உடன்படிக்கைக்கு பிறகு மாகாணசபைகள் அமைக்கப்பட்ட பின்னரும் கூட அரசாங்கங்கள் அரசியல் தீர்வை நோக்கிய இந்த செயன்முறைகளை முன்னெடுத்ததன் மூலம் 13 வது திருத்தம் இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு அல்ல என்பதை ஏற்றுக்கொண்டன என்பதை நிரூபிப்பதே அவரின் நோக்கமாக இருந்தது.

ஜனாதிபதிகளுடனும் சிங்கள அரசியல்வாதிகளுடனும் சுமுகமான உறவை சம்பந்தன் கொண்டிருந்தார். இது குறித்து தீவிர தமிழ்த் தேசியவாத சக்திகள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தன. ஆனால், அத்தகைய சுமுக உறவைக் கொண்டிருந்தாலும் அந்த சிங்கள தலைவர்களின் தவறுகளை நேரடியாகவே சுட்டிக்காட்டும் துணிச்சல் சம்பந்தனிடம் இருந்தது. அவரது நீண்ட கால அரசியல் அனுபவமும் வயதுமுதிர்ப்பும் அதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

மகிந்த ராஜபக்சவின் கட்சி தமிழர் விரோத உணர்வுகளை சிங்கள மக்கள் மத்தியில் கிளப்பி தமிழர்கள் நாட்டைப் பிரிக்கப்போகிறார்கள் என்று பிரசாரங்களை முன்னெடுத்தது குறித்து அவருக்கு முன்னாலேயே சம்பந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்த கண்டனத்தை அவரின் மறைவுக்கு பின்னர் பல அவதானிகள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

'மகிந்த ராஜபக்சவும் அவரது சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் செய்துவருகின்ற பிரசாரங்கள் கேடுவிளைவிக்கும் நோக்குடனானவை என்பதை இந்த நாட்டில் உள்ள சகலரும் புரிந்து கொள்ளவேண்டும். இந்த பிரசாரத்தை பொதுஜன பெரமுனவும் நீங்களும் தொடர்ந்து செய்வீர்களேயானால், தமிழீழம் எமது நடவடிக்கைகளினால் அல்ல உங்களது தாமரை மொட்டில் இருந்து தான் மலரும் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன். உங்களது கட்சியின் சின்னமான தாமரை மொட்டு ஈழமாக மலரும். இறுதியில் அதுவே நடக்கும். தவறான பிரசாரங்களைச் செய்து மலிவான அரசியல் ஆதாயத்தை தேட முயற்சிக்காதீர்கள்" என்று சம்பந்தன் சபையில் கூறினார்.

இந்திய - இலங்கை சமாதான உடன்டிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக தமிழ்த் தலைவர்கள் இந்திய தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் சம்பந்தன் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பைச் செய்தார். அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகிய மூவரையும் கொண்ட குழுவே அந்த பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

அவர்கள் அன்றைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஒரு சந்தர்ப்பத்தில் சம்பந்தன் சம்பந்தப்பட்ட சுவாரஸ்யமான சம்பவம் ஒன்றை கடந்த வாரம் சென்னை 'இந்து' ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் அதன் கொழும்பு செய்தியாளர் மீரா சிறினிவாசன் நினைவுபடுத்தினார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மொழி ரீதியான நிலத்தொடர்ச்சி இல்லாதவை என்று ராஜீவ் காந்தியின் விசேட தூதுவர் ரொமேஷ் பண்டாரியை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன நம்பவைத்திருந்தார் என்று மூன்று தமிழ் தலைவர்களும் அறிந்துகொண்டார்கள்.

அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோருடன் சென்னையில் இருந்த சம்பந்தன் பிரதமர் ராஜீவ் காந்தியை சந்தித்து உண்மை நிலையை விளக்க விரும்பினார். திருச்சிக்கு பிரதமர் வரவிருப்பதாகவும் அவர் டில்லி திரும்பும் அதே விமானத்தில் சேர்ந்து பயணம் செய்வது மாத்திரமே அவரைச் சந்தித்து பேசுவதற்கான ஒரே வழி என்று பிரதமர் அலுவலகம் சம்பந்தனுக்கு அறிவித்தது.

மூன்று தமிழ் தலைவர்களும் இரவோடிரவாக சென்னையில் இருந்து திருச்சிக்கு ரயிலில் சென்று அங்கிருந்து பிரதமரின் விமானத்தில் பயணம் செய்வதற்கான வாய்ப்பைப் பெற்றனர்.

கையில் ஒரு வரைபடத்தை வைத்துக்கொண்டு ராஜீவ் காந்தியுடன் பேசிய சம்பந்தன் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான மொழிரீதியான நிலத்தொடர்ச்சி குறித்து தெளிவாக விளக்கமளித்தார். டில்லியில் விமானத்தில் இருந்து இறங்கியபோது பிரதமருடன் கைகுலுக்கி விடைபெற்ற சம்பந்தன் 'நான் கூறியவை எல்லாம் முழுவதும் உண்மை " என்று கூறினார்.

சில மாதங்களுக்கு பிறகு இலங்கை ஜனாதிபதியுடன் ராஜீவ் காந்தி கைச்சாத்திட்ட சமாதான உடன்படிக்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு முக்கியமான ஏற்பாடாக உள்ளடக்கப்பட்டது. இந்திய பிரதமருடன் சேர்ந்து விமானத்தில் பயணம் செய்தது குறித்து பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திய சம்பந்தன் 'வடக்கு, கிழக்கு இணைப்பு ஆகாயத்தில் உறுதிப்படுத்தப்பட்டது' என்று நகைச்சுவையாகக் கூறினார். இவ்வாறு மீரா சிறினிவாசன் எழுதியிருக்கிறார்.

சம்பந்தன் இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த இரண்டாவது தமிழ் தலைவராவார். முதலில் அமிர்தலிங்கம் 1977 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டு வரையும் பிறகு சம்பந்தன் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையும் அந்த பதவியை வகித்தனர். அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த காலப்பகுதிக்கு பிறகு உள்நாட்டுப் போர் மூண்டது. அதே உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னரான காலப்பகுதியில் சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு வந்தார். ஒரு எதிர்க்கட்சி தலைவராக இல்லாமல் சிறிசேன - ரணில்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு: பகுஜன் சமாஜ் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை - இதுவரை நடந்தது என்ன?

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக மாநிலத் தலைவரான ஆம்ஸ்ட்ராங் சென்னையில் அவரது வீட்டின் அருகில் அடையாளம் தெரியாத நபர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலை வழக்கில், 8 பேர் கைது செய்யப்பட்டுள்தாகவும் கொலையின் உண்மையான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் சென்னை வடக்கு மண்டல கூடுதல் ஆணையர் அஸ்ரா கார்க் தெரிவித்துள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் சென்னை பெரம்பூரில் வசித்து வருகிறார். இதற்கு அருகிலேயே தனது பழைய வீட்டை இடித்துக் கட்டி வருகிறார். தினமும் மாலையில் அவர் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிடுவது வழக்கம். அதேபோல, இன்றும் அவர் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டுவிட்டு, சிலருடன் பேசிக்கொண்டிருந்தார்.

அப்போது அங்கே இரு சக்கர வாகனத்தில் வந்தவர்கள் அவரை அரிவாளாலும் கத்தியாலும் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றனர். உடனிருந்த இரண்டு பேருக்கும் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டன. இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணியளவில் நடைபெற்றது. உடனடியாக செம்பியம் காவல் நிலையத்திற்குத் தகவல் அளிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்திற்கு வந்த காவல்துறையினர் அவரை மீட்டு க்ரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால், சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்தார். உடனிருந்த இரண்டு பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 8 பேரை கைது செய்து தனிப்படை போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருவதாக வடசென்னை கூடுதல் ஆணையர் அஸ்ரா கார்க் கூறியுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய வடசென்னையின் கூடுதல் ஆணையர் அஸ்ரா கார்க், "தற்போது 8 பேரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறோம். இது முதல் நிலை விசாரணைதான். கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்டு தீவிர விசாரணை நடத்தினால்தான் கொலை குறித்த முழுமையான காரணம் தெரிய வரும். 10 தனிப்படைகளை அமைத்து நாங்கள் விசாரித்து வருகிறோம். கொலையில் சில கூரிய ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார்.

**கைது செய்யப்பட்ட ஆதரவாளர்கள்**

வெள்ளிக்கிழமை இரவு சென்னையில் கொல்லப்பட்ட தமது மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலையில் உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியும் இந்த வழக்கை மத்தியப் புலனாய்வு அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் கோரி அவரது ஆதரவாளர்கள் சென்னை ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவமனைக்கு முன்பாக சாலை மறியலில் ஈடுபட்டு கோஷங்களை எழுப்பினர்.

இதனால் பரபரப்பான சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் அருகில் போக்குவரத்து அரை மணிநேரத்திற்கும் மேலாகத் தடைபட்டது. அவர்களுடன் காவல் துறையினர் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அதற்கு அவர்கள் இணங்காத நிலையில், அனைவரையும் கைது செய்தனர்.

ஆம்ஸ்ட்ராங் கொலையில் சிபிஐ விசாரணை நடத்தக் கோரி அவரது உடல் வைக்கப்பட்டுள்ள சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனை அருகே திரண்ட அவரது ஆதரவாளர்கள், உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பான காலை வேளையில் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே போக்குவரத்து ஒன்றரை மணிநேரத்துக்கும் மேலாகத் தடைபட்டுள்ளது.

ஆம்ஸ்ட்ராங்கின் உடல்கூறாய்வு முடிந்த நிலையில், அவரது உடலை வாங்க அவரது உறவினர்கள் மறுத்தனர். அவர்களுடன் காவல்துறையினர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.





அவரது உடலுக்கு காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் கு. செல்வப்பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

இதற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய திருமாவளவன், "ஆம்ஸ்ட்ராங் வழக்கில் சரணடைந்தவர்களை உண்மைக் குற்றவாளிகளாகக் கருதக்கூடாது. தீர விசாரித்து உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும்" என்று தெரிவித்தார்.

ஆம்ஸ்ட்ராங் கொலையைத் தொடர்ந்து பெரம்பூர் பகுதியில் கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. காவல் துறையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**எடப்பாடி பழனிசாமி விமர்சனம்**

மொத்தம் ஆறு பேர் இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கருதப்படுகிறது. அந்த இடத்தில் இருந்த சிசிடிவி காட்சிகளைச் சேகரித்துள்ள காவல் துறை, தனிப்படை அமைத்து இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைத் தேடி வருகின்றனர்.

அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடக்காமல் இருக்க செம்பியம், பெரம்பூர் பகுதியில் காவல்துறையினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

"ஒரு தேசியக் கட்சியின் மாநிலத் தலைவர் பொறுப்பில் உள்ளவர் படுகொலை செய்யப்படுகிறார் எனில், இதற்கு மேல் திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கை என்னவென்று சொல்லி விமர்சிப்பது? கொலை செய்வதற்கான தைரியம் குற்றவாளிகளுக்கு எப்படி வருகிறது?

காவல்துறை, அரசு, சட்டம் என எதன் மீதும் அச்சமற்ற நிலையில் தொடர்ச்சியாகக் குற்றங்கள் நடைபெறும் அளவிற்கு அவல நிலைக்கு சட்டம் ஒழுங்கைத் தள்ளிய திமுக முதல்வருக்கு எனது கடும் கண்டனம்" என எடப்பாடி கே. பழனிசாமி விமர்சித்துள்ளார்.

சென்னையில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் அவ்வ் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தமிழ்நாடு பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

"மாநிலத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கைச் சீர்குலைத்து விட்டு, மு.க.ஸ்டாலின் மாநில முதலமைச்சராகத் தொடரும் தார்மீகப் பொறுப்பு அவருக்கு இருக்கிறதா என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும்," என்றும் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் சேலத்தில் அதிமுக பிரமுகர் வெட்டிக் கொல்லப்பட்ட நிலையில், ஒரு கட்சியின் மாநிலத் தலைவரும் வெட்டிக் கொல்லப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**மாயாவதி மற்றும் திருமாவளவனின் கண்டனம்**

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவரான ஆம்ஸ்ட்ராங் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு அக்கட்சியின் தேசியத் தலைவர் மாயாவதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் (முன்னர் ட்விட்டர்) பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "தமிழ்நாடு மாநில பகுஜன் சமாஜ் கட்சியின் (பிஎஸ்பி) தலைவரான ஆம்ஸ்ட்ராங், அவரது சென்னை வீட்டிற்கு வெளியே கொடூரமான முறையில் கொல்லப்பட்டது மிகவும் வருந்தத்தக்கது மற்றும் கண்டனத்திற்குரியது. தொழில்முறை வழக் கறிஞரான அவர், தமிழ்நாட்டின் வலுவான தலித் குரலாக அறியப்பட்டார். தமிழ்நாடு அரசு குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணன் சகோதரர் ஆம்ஸ்ட்ராங் அவர்களைச் சமூக விரோதக் கும்பல் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்த தகவல் மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

சமூக விரோதக் கும்பலின் கோழைத்தனமான இந்தக் கொடூரத்தை விடுதலைச் சிறுத்தைகள் வன்மையாகக் கண்டிக்கிறது. குற்றவாளிகள் அனைவரையும் உடனடியாகக் கைது செய்து குண்டர் தடுப்புக் காவலில் சிறைப்படுத்த வேண்டுமென தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறோம்" என்று கூறியுள்ளார்.

ஆம்ஸ்ட்ராங் தமிழகத்தில் பௌத்தத்தைப் பரப்புவதில் அதீத முனைப்புடன் செயல்பட்டவர் என்றும், சென்னை-பெரம்பூர் பகுதியில் உள்ள தனது இல்லத்தின் அருகில் பௌத்த விகாரை ஒன்றை அவர் கட்டியுள்ளார் என்றும் திருமாவளவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில், அமைதிப் பூங்காவாக இருக்கும் தமிழ்நாட்டில் இத்தகைய படுகொலைகள் நிகழ்த்தப்படுவது மிகுந்த வேதனைக்குரியது என்றும், இதை வன்மையாகக் கண்டிப்பதாகவும் கூறியுள்ளார்.

"தமிழக பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் ஆம்ஸ்ட்ராங் வன்முறை கும்பலால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் மிகுந்த அதிர்ச்சியையும், துயரத்தையும் தருகிறது. தமிழகத்தில் பட்டியலின மக்களுக்கு கல்வி பயில, தொழில் தொடங்க, அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய மிகுந்த சேவை மனப்பான்மையோடு பாடுபட்டவர்.

இதன் மூலம் அவர்களது நன்மதிப்பையும் பெற்று வந்தார். இதற்கு என்ன பின்னணி என்பதை காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று கு. செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

**மு.க.ஸ்டாலின் கூறியது என்ன?**

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் திரு. ஆம்ஸ்ட்ராங் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பேரதிர்ச்சியையும் பெரும் வருத்தத்தையும் அளித்திருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும், "அவரை இழந்து வாடும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, வழக்கை விரைவாக நடத்தி, குற்றவாளிகளுக்குச் சட்டப்படி உரிய தண்டனை பெற்றுத்தரக் காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்," என்று அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**நடிகர் விஜய் மற்றும் கமல் ஹாசன் கூறியது என்ன?**

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது என நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் எக்ஸ் (முன்னர் ட்விட்டர்) தள பதிவில், "ஆம்ஸ்ட்ராங் அவர்களைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவரது கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது போன்ற கொடும் குற்றச் சம்பவங்கள் இனி நடைபெறாமல் இருக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தமிழக அரசு தீவிரமாக முன்னெடுக்க வேண்டும். சமரசம் இல்லாமல் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி அனைவரது பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

நடிகரும், மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல் ஹாசன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், "பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவரும், வழக்கறிஞருமான ஆம்ஸ்ட்ராங் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது. அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பகுஜன் சமாஜ் கட்சியினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்த ஆம்ஸ்ட்ராங்கின் மறைவு பட்டியலின மக்களுக்குப் பேரிழப்பு என்று கூறிய கமல் ஹாசன், "ஒரு தேசியக் கட்சியின் மாநிலத் தலைவர் கூலிப் படையினரால், மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் படுகொலை செய்யப்பட்டிருப்பது கடும் கண்டனத்துக்குரியது. இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக அரசை வலியுறுத்துகிறேன்." என்றும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தலைவரின் மறைவின் முன்னரும் பின்னரும்.....!

பனங்காட்டான்

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராகவும், 2001ல் உருவான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவராகவும் முன்னர் கடமையாற்றிய திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் இராஜவரோதயம் சம்பந்தன் நீண்டகால உபாதையின் பின்னர் கடந்த மாதம் 30ம் திகதி இரவு 11 மணியளவில் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் இயற்கையானார்.

கொழும்பில் மலர்ச்சாலை ஒன்றிலும், நாடாளுமன்ற வளாகத்திலும் மரியாதை அஞ்சலிக்காக இவரது திருவுடல் வைக்கப்பட்ட பின்னர், யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்பட்டு தமிழரசுக் கட்சி தலைமைப் பணிமனையில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. பின்னர் திருமலை எடுத்துச் செல்லப்பட்டு மத அனுட்டானங்களைத் தொடர்ந்து திருவுடல் தகனம் செய்யப்பட்டவுள்ளது. தமிழ் ஊடகங்களுக்கு பழக்கப்பட்டுப் போன மொழியில் இதனைக் குறிப்பிடுவதானால், அன்னாரின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமமானது என்று சொல்ல வேண்டும்.

1933ம் ஆண்டு பிறந்த சம்பந்தன் 1956ல் தமது 23வது வயதில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகச் சேர்ந்து, சத்தியாக்கிரகம் போன்ற தமிழீழ வரலாற்று நிகழ்வுகளில் பங்குபற்றியவர். வழக்கறிஞரான இவர் என்ன காரணத்தினாலோ தெரியாது 1960, 1965 தேர்தல்களில் போட்டியிட இணங்கவில்லை.

1972ல் தமிழரசும், தமிழ் காங்கிரசும் இணைந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உருவான பின்னர் இடம்பெற்ற 1977ம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானவர். 1983 இனப்படுகொலையைத் தொடர்ந்து ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு நிறைவேற்றிய ஆறாம் திருத்தத்தின் பிரகாரம் சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்த கூட்டணி எம்.பிக்கள் தங்கள் பதவிகளை இழந்த போது அவர்களில் ஒருவரானவர் சம்பந்தன்.

ஆனால், 1989 மற்றும் 1994ம் ஆண்டுத் தேர்தல்களில் திருமலையில் இவர் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. 1997 யூலையில் திருமலை மாவட்ட எம்.பியாக இருந்த அ.தங்கத்துரையின் கொலையை அடுத்து அந்த வெற்றிடத்துக்கு இவர் நியமனமானார். எனினும், 2000ம் ஆண்டுத் தேர்தலிலும் இவர் தோல்வியடைந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்து தமிழ் தேசிய கட்சிகளையும் போராட்டக் குழுக்களையும் இணைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஆரம்பித்த பின்னர் இடம்பெற்ற ஐந்து பொதுத்தேர்தல்களிலும் இவருக்கு வெற்றி கிடைத்தது. கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக இவர் நியமிக்கப்பட்டதாலேயே இவரால் நாடாளுமன்றம் போக முடிந்தது என்பது வரலாற்றில் பதிவான குறிப்பு.

ஒருவர் மரணமடைந்த பின்னர் அவரது வாழ்வின் நற்பக்கங்களையே முன்நிறுத்த வேண்டுமென்பது பொதுப்பண்பாடு. அதேசமயம் விடுதலையை வேண்டி நிற்கும் ஓர் இனத்தின் அரசியல் தலைமையை ஏற்ற ஒருவரின் செயற்பாடுகளை எவ்வேளையிலும் காய்தல் உவத்தலின்றி ஆய்வதும் பகிர்வதும் வரலாற்றுக் கடமை.

அந்த வகையில் சம்பந்தன் அவர்களின் சுமார் ஐந்து தசாப்த (1977-2024) கால அரசியல் நோக்கையும் போக்கையும் கணிக்க வேண்டிய தேவை இங்குள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டது போன்று இவர்கள் இருவரும் 1977 தேர்தல் ஊடாகவே நாடாளுமன்றம் புகுந்தவர்கள். இருவரும் அரசியலில் வெவ்வேறு காலங்களில் ஏற்ற இறக்கங்களை சந்தித்தவர்கள்.

தமது பெரிய தந்தையார் முறையான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் அரசியலுக்கு இழுத்து வரப்பட்டு கடைசியாக பலத்த தோல்வியை சந்தித்த பின்னர் தமது யுக்தியால் ரணில் ஜனாதிபதியாகியுள்ளார். மூன்று தேர்தல்களில் அடுத்தடுத்து தோல்வியடைந்து அரசியலிலிருந்து ஓய்வுபெறும் எண்ணத்திலிருந்த சம்பந்தனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினூடாக மீண்டும் அரசியலுக்கு இழுத்து வந்தவர்கள் விடுதலைப் புலிகளென அவ்வேளையில் தமிழ் ஊடகமொன்றின் கட்டுரை குறிப்பிட்டது நினைவிலுள்ளது.



> அரசியலில் வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்றுக் கொண்ட ஒரு தலைவர் தம்மை ஏமாற்றிய சிங்களவர்களையும், தம்மை இழுத்து வீழ்த்த முனைந்த உள்வீட்டுக்காரர்களையும் மன்னித்தாரா? தமது மறைவின் பின்னர் தம்மை வைத்து அரசியல் நாடகங்களை அரங்கேற்றிப் பிழைக்கப்போகும் வேடதாரிகளை அவர் முற்கூட்டியே அறிந்திருப்பாரா? இக்கேள்விகளுக்கான பதிலைப் பெற காத்திருக்கும் காலம் நீண்டு செல்லாது.

சம்பந்தனின் மறைவுக்கு உள்நாட்டிலும் இந்தியாவிலிருந்தும் பலர் அனுதாபம் தெரிவித்துள்ளனர். அநேகமாக எல்லோருமே இவரை தமிழர் அரசியலின் ஆணிவேர், மூலவேர், ஆளுமை, தனித்துவ தலைவர், ஒரு சகாப்தத்தின் முதல்வர் என்று கூறியிருப்பது அரசியல் நாகரிகம் கருதும் வழமையான சொல்லாடல்கள். ஆனால் ரணிலினதும், மனோ கணேசனினதும் அறிக்கைகள் இவ்விடயத்தில் ஆழமாக கவனிக்க வேண்டியவையாக அமைந்துள்ளன.

ரணிலின் வார்த்தைகள் பின்வருமாறு அமைந்துள்ளன: 'சம்பந்தன் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் அவர் எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக பங்காற்றினார். ஒருமுறை அவர் என்னுடன் உரையாற்றும்போது, 'ரணில், நான் நாட்டைப் பிரிப்பேன் என்று நினைக்கிறீர்களா? நான் சிறுவனாக இருந்தபோது, 1948ல் நாடு சுதந்திரம் பெறுவதைப் பார்க்கச் சென்றிருந்தேன்" என்று அவர் என்னிடம் குறிப்பிட்டார். அப்போது தாம் பிறக்கவேயில்லை என்று குறிப்பிட்ட ரணில், அதிகாரப் பகிர்வு தொடர்பாக சம்பந்தன் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார் என்றும் அதற்குப் போதுமான பங்கை செய்துள்ளதாக நினைக்கிறேன் என்றும் தொடர்ந்து தெரிவித்திருந்தார்.

சம்பந்தனின் மறைவின் பின்னர் ரணில் சுட்டிக்காட்டியிருக்கும் இவ்விடயங்கள், அதற்கான வார்த்தைகள் வஞ்சகப் புகழ்ச்சியானவை என்றே நோக்க வைக்கிறது. சம்பந்தனைப் புகழ்வதுபோல் புகழ்ந்து அவர் எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக பங்காற்றினார் என்று குறிப்பிட்டிருப்பது உண்மையாக இருப்பின் சம்பந்தன் இரட்டைக் கொள்கையுடன் இயங்கினாரா என்ற கேள்வியை எழுப்புகிறது.

1977ம் ஆண்டு தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கில் போட்டியிட்டு அமோக ஆசனங்களைப் பெற்ற வேளையிலேயே சம்பந்தனும் அவர்களுள் ஒருவராக நாடாளுமன்றத்துக்கு தெரிவானவர். ஆனால் ரணில் சம்பந்தனை எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக பங்காற்றியவர் என்று குறிப்பிடுவது உண்மையல்ல. முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட 2009ன் பின்னர் சம்பந்தனின் நிலைப்பாடு ரணில் சொல்வதாக இருந்திருக்கலாம். ஆனால், 'எப்போதும்' என்று ரணில் குறிப்பிட்டிருப்பது சம்பந்தன் மீது தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை இல்லாமற் செய்யும் வஞ்சக நோக்குடையது.

இவ்விடத்தில் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்திருக்கும் கருத்து ரணிலின் சுயரூபத்தை அப்படியே வெளிக்காட்டுவது. 'ரணிலால் மோசமாக ஏமாற்றப்பட்டவர் சம்பந்தன்" என்று சொன்னதோடு மட்டும் நிற்காது சம்பந்தனை நாற்பது, ஐம்பது வருடங்களாக தங்களுக்குத் தெரியும் என்றும் இனி பலர் வந்து வாயளப்பார்கள் என்று மனோ கணேசன் சொன்னதை கடந்த ஒரு வாரமாக காண முடிந்தது.

நாலரை வருட நல்லாட்சிக் காலத்தில் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு புதிய அரசியலமைப்பு வருகிறது என்று கூறி சம்பந்தனை ரணில் ஏமாற்றியதையே மனோ கணேசன் குறிப்பிட்டிருக்கிறார். சம்பந்தனை ரணில் ஏமாற்றினார் என்றால் அதில் சுமந்திரன் பெரும் பங்கு வகித்தவர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். இவ்விடயத்தில் தரகர் போலவிருந்து ரணில் மீதான நம்பிக்கையை சம்பந்தனுக்கு ஊட்டியவர் சுமந்திரன் என்பது புதிய தகவல் அல்ல.

மனோ கணேசனின் கூற்றுக்கு வலுச் சேர்க்கும் வகையில் மட்டக்களப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தமது அஞ்சலியில் ஒரு கருத்தைக் கூறியிருந்தார். 'அடுத்த ஜனாதிபதியும் ஏமாற்றுவதற்கு முன்னர் சம்பந்தன் காலமாகி விட்டார்" என்பது இவரது கருத்து. சுமந்திரன் எதிர்பார்க்கும் அடுத்த ஜனாதிபதி சஜித் பிரேமதாச என்பதை மனதில் நிறுத்தியே அரியநேந்திரன் இக்கருத்தைக் கூறியிருப்பாரென எண்ணத் தோன்றுகிறது. அதாவது அடுத்த ஜனாதிபதியாக சஜித் வந்தாலும் இனப்பிரச்னைக்கு அவரால் தீர்வு தர முடியாதென்பதே இதன் அர்த்தம்.

சம்பந்தனின் இறுதி மரியாதை நிகழ்வுகள் பற்றி பல விமர்சனங்கள் வந்துள்ளன. ராணுவ மரியாதையுடன் இறுதிச் சடங்கை நிகழ்த்த சம்பந்தனின் அரசியல் வாரிசு என தம்மை எண்ணிக் கொண்டவர் முயன்றாராயினும் சம்பந்தனின் குடும்பத்தினர் அதனை நிராகரித்து விட்டதாக சொல்லப்படுகிறது. அரசாங்க பங்களாவில் வசித்து வந்தவருக்கு ராணுவ மரியாதை வழங்குவதில் தவறென்ன என்றும் ஓரிரு குரல்கள் எழுந்துள்ளன.

கொழும்பிலிருந்து வீதி வழியாகவே சம்பந்தனின் திருவுடலை யாழ்ப்பாணம் கொண்டு செல்ல இருந்ததாயினும், அவ்வாறு நிகழுமாயின் கிளிநொச்சியில் சிறீதரன் எம்.பி.யின் செல்வாக்கு அதிகரித்துவிடுமென எண்ணியே அதனை விமானம் மூலம் எடுத்துச் செல்ல முடிவானதாகவும் ஒரு தகவல். இவ்விடயங்கள் பற்றி தமிழக பிரமுகர் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் சில தகவல்களை தமது முகநூலில் குறிப்பிட்டிருப்பதை சமூக ஊடகங்கள் வெளிக்கொணர்ந்திருக்கின்றன.

'முதுமையினால் செயற்பாட்டு அரசியலில் பங்களிப்பு செய்ய முடியாதிருப்பதன் காரணமாக சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்க வேண்டும்' என சுமந்திரன் தொலைக்காட்சி செவ்வியொன்றில் கடந்த வருடம் தெரிவித்த விடயம் மிகப் பிரபலமானது. இதனை நேரடியாகவே சம்பந்தனிடம் இவர் தெரிவித்தபோது, 'எனது உடல்நிலையைத் தெரிந்து கொண்டும் திருமலை மக்கள் என்னைத் தெரிவு செய்தார்கள். எனவே பதவி துறக்க வேண்டிய தேவை இல்லை" என்று முகத்தில் அடித்தாற் போல் சம்பந்தன் சுமந்திரனிடம் கூறியிருந்தார்.

சுமந்திரனின் விருப்பத்தை வழிமொழிவது போல் கனடாவிலிருந்து இறக்கப்பட்ட சண்முகம் குகதாசன் மற்றொரு தொலைக்காட்சிச் செவ்வியில், 'ஐயாவுக்கு காது கேட்காது, சரியாக உரையாட மாட்டார், தொலைபேசியில் நாங்கள் சொல்வது அவருக்குப் புரியாது' என்று தங்கள் தலைவரை நையாண்டி பண்ணியதும் உலகறிந்த விடயம்.

இப்போது இவர்கள் இருவரதும் விருப்பத்தை இயற்கை நிறைவேற்றி விட்டது. சண்முகம் குகதாசன் ஐயாவின் இடத்துக்கு எம்.பி.யாகி விட்டார். (ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றம் கலைக்கப்படுமாயின் இப்பதவி ஆகக்கூடியது மாதக்கணக்காக இருக்கலாம்.) சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவராக போட்டியின்றி நியமனமாவதற்கு எத்தனிக்கலாம். தமிழரசுக் கட்சி வெளியேறிய பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ரெலோ மற்றும் புளொட்டின் வசமாகி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பாகி விட்டது. இதன் தலைமைப் பதவி சுமந்திரனுக்கோ, குகதாசனுக்கோ கிடைக்காது.

அரசியலில் வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்றுக் கொண்ட ஒரு தலைவர் தம்மை ஏமாற்றிய சிங்களவர்களையும், தம்மை இழுத்து வீழ்த்த முனைந்த உள்வீட்டுக்காரர்களையும் மன்னித்தாரா? தமது மறைவின் பின்னர் தம்மை வைத்து அரசியல் நாடகங்களை அரங்கேற்றி பிழைக்கப்போகும் வேடதாரிகளை அவர் முற்கூட்டியே அறிந்திருப்பாரா? இக்கேள்விகளுக்கான பதிலைப் பெற காத்திருக்கும் காலம் நீண்டு செல்லாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரா.சம்பந்தன்: தோல்வி வரலாற்றின் இன்னோர் அடையாளம்



யதீந்திரா

இரா.சம்பந்தன் எதற்கு இந்தப் பதவியை கட்டியணைத்துக் கொண்டிருக்கின்றார். அவர் பதவி விலகலாம்தானே - இப்படிக் கேட்டவர்கள் பலர். சம்பந்தனால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட எம்.ஏ.சுமந்திரனே, அவரது ஓய்வின் அவசியம் பற்றி பேசியிருந்தார். திருகோணமலையை சேர்ந்த ஒரு குழுவினர், தமிழரசு கட்சியின் மத்திய குழுவில் முறையிட்டனர். பலரும் விரும்பியது போன்றே, சம்பந்தன் அரசியல் வாழ்விலிருந்து மட்டுமல்ல, உலக வாழ்விலிருந்தும் விடைபெற்றுவிட்டார். குறிப்பாக, அவரால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டவர்கள் அனைவராலும் வஞ்சிக்கப்பட்ட ஒரு மனிதராகவே, அவர் விடைபெற்றிருக்கின்றார். சம்பந்தன் விடைபெற்ற போது, அவர் உண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இல்லை - எனெனில், அவரையும் சாட்சியாகக் கொண்டே, கூட்டமைப்பு உடைவுற்றது. எதனையும் தடுக்கவும், தள்ளிநிற்கவும் முடியாதவராக முடங்கிக்கிடந்தார். ஆனாலும் சம்பந்தன் இப்போதும் கூட்டமைப்பின் தலைவர் என்றே அழைக்கப்படுகின்றார். சம்பந்தன் எவரையெல்லாம் தேவையில்லாதவர்கள் என்று புறம்தள்ளியிருந்தாரோ, அந்தப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் எவருமே சம்பந்தனுக்கான கௌரவத்தை ஆட்சேபிக்கவில்லை. அரசியலில் மற்றவர்களை உதாசீனம் செய்வோருக்கு இது ஒரு படிப்பினை. அதிகார ஆட்டம் நிரந்தரமல்ல.



திருகோணமலை இந்துக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில்தான், சம்பந்தன் ஐயா என்றொருவர் இருக்கின்றார் என்பதை முதல் முதலாக அறியும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது சந்திரிக்கா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தார். இந்தக் காலத்தில் சம்பந்தன் ஐயா, குண்டு துளைக்காத வாகனத்தில்தான் திருகோணமலை வந்து செல்வார். அந்தக் காரின் நிறம் சரியாக இப்போது பிடிபடவில்லை. குறிப்பாக அவரது வீட்டுக்கு அருகில் இருக்கும், அவரது குடும்பக் கோவிலான கந்தசாமி கோவில் திருவிழாவிற்கு அவர் தவறாமல் வருவதுண்டு. ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் புடைசூழவே அவரது வரவு நிகழும். இது தொடர்பில் பலரும் பலவிதமாக பேசிக் கொள்வதை, ஒரு சிறுபையனாக, என் காதுகளில் வாங்கியிருக்கின்றேன். அந்த காலத்தில் சம்பந்தன் ஐயா, ஏன் குண்டு துளைக்காத வாகனத்தில் வரவேண்டி வந்தது? அவருக்கு எதற்காக அந்தளவு பாதுகாப்பு வழங்கப்பட்டது? மக்கள் மத்தியில் இவ்வாறான கேள்விகள் இருப்பதும், அந்தக் கேள்விகளுக்கு அவர்களே பதிலளிப்பதையும் நான் செவியுற்றிருக்கின்றேன்.

அப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தனை ஹிட் லிஸ்ட்டில் (கொல்லப்பட வேண்டியவர்களின் பட்டியல்) வைத்திருந்ததாகவே நம்பப்பட்டது. அரசியல் தீர்வுப் பொதி விடயத்தில் சந்திரிக்கா குமாரதுங்கவுடன் நெருங்கிச் செயற்பட்டுக் கொண்டிருந்த நீலன் திருச்செல்வம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தார். அடுத்தது, சம்பந்தன்தான் என்றவாறான கதைகள் அப்போது பரவலாக திருகோணமலையில் உலவிக் கொண்டிருந்தது. இந்தக் காலத்தில்தான் அவர் குண்டுதுளைக்காத வாகனத்தில் வந்து சென்று கொண்டிருந்தார். தான் ஹிட் லிஸ்ட்டில் இருந்த விடயத்தை பின்னர் அவரே உறுதிப்படுத்தியுமிருக்கின்றார். விடுதலைப் புலிகளுக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்பதை நிரூபிக்க வேண்டும் என்பதற்காக, தேவையற்ற வகையில், அவர் கடுமையாகவே முயற்சி செய்திருந்தார். இந்த சந்தர்ப்பத்தில்தான் 2012இல் ஆற்றிய நாடாளுமன்ற உரையொன்றில், இவ்வாறு கூறியிருந்தார். சிங்கள ஆளும் குழுமத்திற்கு நல்லவராக இருக்க வேண்டும் என்பதே அவரது பிரதான கரிசனையாக இருந்தது.

சம்பந்தன் ஐயாவை, முதல் முதலாக சந்தித்த சந்தர்ப்பத்தை இப்போது நினைத்துக் கொண்டால் அது சுவாரஸ்யமானது. ஏனெனில் வேலைவாய்ப்பு கேட்டே அவரது இல்லத்திற்கு முதல் முதலாக சென்றிருந்தேன். நான் 1995ம் ஆண்டு, உயர்தர பரிட்சை எழுதினேன். ஐயாவிடம் போய் வேலைவாய்ப்பு கேட்போம் என்று கூறி, எனது தாயார் அழைத்துச் சென்றார். காலம், என்னைப் போன்ற சாமானியர்களையும், தமிழ் தேசிய அரசியலின் பக்கமாக கொண்டு வருமென்று, நான் சிறிதும் எண்ணிப்பார்த்திராத நாட்களது. அன்று அவர் எங்களிடம் கூறிய விடயங்களை, பின்னர் அவரோடு பழகிய நாட்களில், அவர் மற்றவர்களுக்குச் சொல்வதை நான் நேரடியாகவே பார்த்திருக்கின்றேன். எனது தாயாரை பார்த்து கூறினார், தங்கச்சி, நான் இது போன்ற சிறிய விடயங்களில் ஈடுபடுவதில்லை. நான் சுவிஸ் அரசியல் யாப்பு தொடர்பில் ஆராய்ந்து கொண்டிருக்கின்றேன், நாங்கள் பெரிய விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம் - அரசியல் தீர்வுக்காக நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்றார்.

ஆனால் ஒரு விடயம் மட்டும் உண்மை - அதாவது, நான் அவரை முதல் முதலாக சந்தித்த போது அவர் எதனை கூறினாரோ, அப்படியான தீர்வு ஒன்றை காணமுடியுமென்று, தள்ளாத வயதிலும் நம்பிக் கொண்டிருந்தார். ஆனால் அவ்வாறானதொரு அரசியல் தீர்வை காண முடியுமா? அதனை தன்னால் சாத்தியப்படுத்த முடியுமா என்னும் கேள்விகளுக்கு அவர் ஒரு போதுமே பதில் தேட முயற்சிக்கவில்லை. இலங்கை தமிழரசு கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் கூட, தான் நம்பும் அரசியல் தீர்வை, தனது காலத்திலேயே, காண முடியுமென்று நம்பியதற்கு சான்றில்லை. செல்வநாயகம் அவர்களின் மருமகன் கலாநிதி, ஏ.ஜே.வில்சன் எழுதிய சுயசரிதையில், கேக் கிடைக்கவில்லை என்பதற்காக பாணை நிராகரிக்கின்ற தலைவராக செல்வநாயகம் இருக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஏனெனில் செல்வநாயகம் ஒரு தனிப் பாய்ச்சலில் அரசியல் தீர்வை பெற்றுவிட முடியுமென்று ஒரு போதுமே நம்பியவரல்ல என்கிறார். தமிழரசு கட்சியின் பாசறையில் அரசியல் கற்றுக் கொண்ட சம்பந்தனால், ஏன் இவ்வாறு சிந்திக்க முடியாமல் போனது?

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான தமிழ் தேசிய அரசியலுக்கு தலைமை தாங்கும் வரலாற்று வாய்ப்பு சம்பந்தனுக்கு கிடைத்திருந்தது. ஒரு புறம் தமிழ் மக்களின் ஒப்பாரிக் கண்ணீர் இன்னொருபுறம் சிதைவுற்றிருக்கும் தமிழ் மக்களின் எதிர்காலத்தை சீர் செய்ய வேண்டிய வரலாற்றுக் கடமை. இந்த இரண்டையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைத்துவம் ஒன்றை வழங்க வேண்டிய வரலாற்றுக் கடமையே சம்பந்தனுக்கு முன்னால் இருந்தது. ஆனால் அப்படியானதொரு வரலாற்றுத் தலைமைத்துவத்தை வழங்கும் பொறுப்பை சம்பந்தன் சரிவர கையாளவில்லை. சம்பந்தனை தமிழ் தேசிய நிலைப்பாடுடைய அனைத்து தரப்புக்களுமே, பெருந் தலைவராக ஏற்றுக்கொள்வதற்கு தயாராகவே இருந்தன. தாயகத்தில் மட்டுமல்ல, புலம்பெயர் தேசங்களிலுள்ளவர்களும் சம்பந்தனின் தலைமைத்துவத்தையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தனர். களத்தையும் புலத்தையும் இணைக்கும் வல்லமையுள்ள ஒரு தலைமைத்துத்தை வழங்கக் கூடிய ஆற்றல் சம்பந்தனிடம் இருந்தது. அன்றைய சூழலில் சம்பந்தனால் மட்டும்தான் அது முடியுமானதாகவும் இருந்தது. ஆனால் அந்த வாய்ப்பை அவர் சரிவர கையாள முயற்சிக்கவில்லை.

சம்பந்தன் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவானவராக ஒரு போதுமே இருந்ததில்லை. இதனை புலிகளும் அறிவார்கள். ஆனால் புலிகளின் பலம் அனைவரையும் வன்னியை நோக்கிச் செல்ல வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தியது. அன்றைய சூழலில், அந்த நிர்பந்தத்தை தவிர்த்து அரசியலில் இயக்கக் கூடிய நிலைமை எவருக்குமே இருக்கவில்லை ஏனெனில் தமிழ் மக்கள் புலிகள் மீதே அபிமானவுள்ளவர்களாக இருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியில்தான் சம்பந்தனும் வன்னி நோக்கிச் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. ஒரு வேளை அவ்வாறானதொரு நிர்பந்தம் இல்லாதிருந்தால், சம்பந்தன் புலிகளை நோக்கிச் சென்றிருக்கவே மாட்டார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், 2001 நாடாளுமன்ற தேர்தலில் சம்பந்தன் திருகோணமலையில் வெற்றிபெற்றார். 1977இல், நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சம்பந்தன், பின்னர் போட்டியிட்டு வெற்றிபெற்றது, 2001ல் தான். 1994, நாடாளுமன்ற தேர்தலில் தங்கத்துரையிடம் தோல்வியடைந்தார். தங்கத்துரை கொல்லப்பட்டதை தொடர்ந்து, அந்த இடத்தை நிரப்பினார். யூலை 5 - 1997 அன்று தங்கத்துரை கொல்லப்பட்டார்.

சம்பந்தன் தொடர்பில் விமர்சனமுள்ளவர்கள் கூட, அவரது ஆளுமையை குறைத்து மதிப்பிடமாட்டார்கள் அந்தளவிற்கு அரசியலில் ஆற்றலுள்ள ஒருவராகவே சம்பந்தன் இருந்தார். இந்தப் பின்புலத்தில்தான் சம்பந்தனை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக வன்னி அங்கீகரித்தது. இதனை சம்பந்தன் பல்வேறு சந்தர்ப்பங்களில் மறுதலித்திருந்தார் ஆனால் அது உண்மையல்ல. கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவரை கூட்டமைப்பின் தலைமையாக நியமிக்க வேண்டும் என்னுமடிப்படையில்தான், சம்பந்தன் விடுதலைப் புலிகளின் முதன்மைத் தெரிவானார். ஆரம்பத்தில் ஜோசப் பரராசசிங்கமே அவர்களது தெரிவாக இருந்ததாக நான் கேள்விப்பட்டிருக்கின்றேன், எனினும், சில காரணங்களால் அது பின்னர் கைவிடப்பட்டிருக்கின்றது.

சமாதான ஒப்பந்த காலத்தில் நான் வன்னிக்கு சென்று வந்திருக்கின்றேன். இந்தக் காலத்தில், சம்பந்தன் ஒரு பெறுமதியான ஆள் என்னும் பார்வை இருந்ததை அவதானித்திருக்கின்றேன். இது சம்பந்தன் என்னும் தனிநபர் மீதான நம்பிக்கை சார்ந்த ஒன்றாக இருக்கவில்லை மாறாக, அன்றைய சூழலில், சம்பந்தன் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருவராக இருந்தார்.

அரசியல் என்பது, ஒரு காலத்தின் கோசங்களை, கேள்விகளின்றி, தொடர்ந்தும் அப்படியே உச்சரித்துக் கொண்டிருப்பதல்ல. சூழ்நிலைகள் மாறுகின்ற போது, அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப நம்மால் நிலைகொள்ள முடியுமா என்னும் கேள்விக்கான பதிலிலிருந்தே, அரசியலை கையாள வேண்டும். அரசியல் என்பது, ஒன்று இல்லையென்றால், அதற்கு அடுத்ததான சிறந்த ஒன்றை அடைவதற்கான கலை என்னும் பிஸ்மார்க்கின் கூற்று, எக்காலத்திற்கும் பொருத்தமானதுதான். ஏனெனில் அரசியல் என்பது சில வேளைகளில் பலத்தினாலும், சில வேளைகளில் தந்திரங்களிளாலும் கையாளக் கூடியது.

பலம் நிரந்தரமான ஒன்றல்ல ஏனெனில் நம்மை விடவும் பலமுள்ள ஒரு சக்தி நமக்கு முன்னால் காட்சியளிக்கும் சூழலில், முஸ்டியை முறுக்குவதால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. சாணக்கியரின் கூற்றில், அது யானையின் மேலிருந்து சண்டை செய்பவனை, தரையிலிருந்து எதிர்ப்பதற்கு சமமானது. அதாவது, பலம் பொருந்திய சக்திகளை எதிர்ப்பதால் பயனில்லை, சூழ்நிலைககளை கணித்து, நமக்கான வாய்ப்புக்களை தேடிக் கண்டடைய வேண்டும். ஒவ்வொரு சூழலும் தரும் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுதான் மக்களுக்கான அரசியலாகும். 2015 ஆட்சி மாற்றம் வாய்ப்புக்களை ஓரளவு கனியச் செய்திருந்தது ஆனால் சம்பந்தன் அதனை பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டு வந்து, வரலாற்றில் தனது இடத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டுமென்று சம்பந்தன் ஆசைகொண்டிருந்தார். செல்வநாயகத்தினால், அமிர்தலிங்கத்தினால் முடியாமல் போனதை, தான் சாதித்துவிட வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டிருக்கலாம் ஆனால் இறுதியில் தோல்வியுடன் விடைபெற்றிருக்கின்றார்.

இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிந்து, கடந்த எழுபத்தைந்து வருடங்களாக தோல்வியின் வரலாறாகவே, தமிழர் அரசியல் தொடர்கின்றது. இந்தத் தோல்வியை ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொருவர் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே, தமிழரின் அரசியல் வாழ்வு கழிந்திருக்கின்றது. இந்தத் தோல்விக்கான அஞ்சலோட்டத்தில், இன்னொரு தோல்வியாளராக தனது, அரசியல் வாழ்வை நிறைவு செய்திருக்கின்றார் சம்பந்தன் ஐயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் எதிர்காலத்துக்காக உடன்படிக்கைகளைச் செய்யும் அரசாங்கம் மக்களினதும் எதிரணியினதும் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டும்



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்பு வருவதற்கு முன்னதாக இன்னமும் ஒரு மாதத்துக்கும் குறைவான காலப்பகுதியே இருக்கின்ற வேளையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையை அதன் சர்வதேச வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுத்த தனது ஆட்சியின் வெற்றியை முதன்மைப்படுத்தி பேசியிருக்கிறார். இலங்கைக்கு இருதரப்பு கடன்களை வழங்கிய பல்வேறு வெளிநாட்டு அரசாங்கங்களை உள்ளடக்கிய உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழுவுடன் 580 கோடி அமெரிக்க டொலர்களுக்கான சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கைச்சாத்தான உடன்படிக்கை பல்வேறு வழகளில் கொண்டாடப்பட்டது.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றினார். பல்வேறு நகரங்களில் பட்டாசு கொளுத்தி கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. இலங்கையின் பொருளாதார மீட்சியின் சிற்பி தானே என்றும் ஜனாதிபதி பெருமையுடன் அறிவித்தார். பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மக்களுக்கு விளக்கவேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது.

'பொருளாதார பாதாளத்தில் இருந்து எமது நாட்டையும் அதன் மக்களையும் காப்பாற்றுவதற்கு எனது ஆற்றலில் நான் நம்பிக்கை வைத்தேன். இதே போன்ற நெருக்கடியில் இருந்து வெளிக்கிளம்புவதற்கு ஏனைய நாடுகள் கடைப்பிடித்த மூலோபாயங்கள் பற்றிய ஆழமான விளக்கப்பாட்டையும் விரிவான வேலைத் திட்டத்தையும் நான் கொண்டிருந்தேன். மேலும், நன்கு திட்டமிடப்பட்ட எனது கொள்கைகள் மற்றும் அர்ப்பணிப்பு மூலமாக பொருளாதாரத்துக்கு புத்துயிரளிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது" என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க தனதுரையில் கூறினார்.

தற்போதைய தருணத்தில் இலங்கைக்கு முக்கியமானவையாக விளங்குகின்ற நாடுகளிடம் இருந்து கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைக்கு உடனடியாகவே பெரும் பாராட்டுக்கள் குவிந்தன.

உடன்படிக்கை கைசசாத்தான செய்தியை வரவேற்ற கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி ஷங், 'இலங்கையின் பொருளாதார மீட்சியிலும் அதன் விரிவாற்றலிலும் இது ஒரு நேர்மறையான முன்னோக்கிய நடவடிக்கை. இலங்கையின் நிதியியல் நிலைவரத்தில் மேலும் கூடுதல் நம்பிக்கையை கட்டயெழுப்ப இது உதவும். நீண்டகால சுபிட்சத்தையும் வளர்ச்சியையும் கொண்டுவரக்கூடிய வெளிப்படைத் தன்மை வாய்ந்ததும் நிலைபேறானதுமான மாற்றங்களை கடைப்பிடிப்பதன் மூலம் சீர்திருந்தச் செயன்முறையை இலங்கை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அமெரிக்கா ஊக்கம் கொடுக்கிறது' என்று கூறினார்.

அதே போன்றே ஜப்பான், இந்தியா மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவையும் இலங்கை கண்டுவரும் முன்னேற்றம் குறித்து திருப்தியை வெளிப்படுத்தின.

அதேவேளை இலங்கையின் இரண்டாவது உடன்படிக்கை ஒன்றையும் செய்துகொண்டது. சீனாவின் எக்சிம் வங்கியுடன் 420 கோடி டொலர்களுக்கான கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையே அதுவாகும். ஆனால் அந்த உடன்படிக்கை சீனாவை உள்ளடக்காத உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவுடன் உடன்படிக்கையை எட்டுவதற்கு பேச்சுவார்த்தை நடத்திய இலங்கைக் குழுவையும் ஜனாதிபதியையும் பாராட்டிய அதே தரப்புகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியது. சீனா உட்பட ஏனைய கடன் வழங்குனர்களுடன் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இலங்கை சமத்துவமான முறையில் நடந்து கொள்ளவேண்டும் என்று அவர்கள் கோரினார்கள்.


குறிப்பாக அவர்கள் இலங்கையின் கடன் உடன்படிக்கைகள் தொடர்பான விபரங்களையும் சமத்துவமாக நடத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவுக்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற சகல தகவல்களையும் தருமாறு கேட்டனர்.

இரு உடன்படிக்கைகள் தொடர்பிலும் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்கள் வெளியில் தெரியாது. ஆனால், பாராளுமன்றத்தில் விவாதம் இடம்பெறும்போது பெரும்பாலும் அந்த விபரங்கள் வெளியிடப்படும். இந்த பதற்றநிலை அரசாங்கத்தின் கொடுக்கல் வாங்கல்களில் வெளிப்படைத்தன்மை இல்லாத பாரதூரமான பிரச்சினையை பிரதிபலிக்கிறது.

'இந்த உடன்படிக்கைகளை அடுத்து சகல இருதரப்பு கடன் தவணைக் கொடுப்பனவுகளை 2028 ஆம் ஆண்டு வரை எம்மால் தாமதிக்கக்கூடியதாக இருக்கும். மேலும் 2043 ஆம் ஆண்டுவரை ஒரு விரிவான காலத்துக்கு சகல கடன்களையும் சலுகை நிபந்தனைகளின் அடிப்படையில் திருப்பிச் செலுத்துவதற்கான வாய்ப்பும் எமக்கு கிடைக்கும்' என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க ஒரு மறைபுதிராகக் குறிப்பிட்டார். இந்த சலுகை நிபந்தனைகள் எவை என்று அவர் கூறவில்லை. அத்துடன் திருப்பிச் செலுத்தவேண்டிய முதலில் செய்யப்படக்கூடிய குறைப்பு பற்றியும் அவர் குறிப்பிடவில்லை.

சலுகை நிபந்தனைகளின் அடிப்படையில் திருப்பிச் செலுத்துவதற்கான தொகை 580 கோடி டொலர்களாக இருக்கப்போகும் அதேவேளை, 2022 ஆம் ஆண்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்ட நேரத்தில் மொத்த வெளிநாட்டுக் கடன் சுமார் 400 கோடி டொலர்களாக இருந்தது.

கடந்த வருடம் கடன் வழங்குனர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியபோது திருப்பிச் செலுத்த வேண்டிய முதலில் ஒரு 30 சதவீத குறைப்பு செய்யப்படக்கூடியது சாத்தியம் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது.



> நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் உடன்படிக்கைகளை செய்யும்போது அரசாங்கம் மக்களினதும் எதிரணி அரசியல் கட்சிகளினதும் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டியதும் அவர்களின் ஆதரவைப் பெறவேண்டியதும் முக்கியமானதாகும்.

இந்த துறையைச் சேர்ந்த சர்வதேச ஆய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி பெற்றகடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு வசதியாகவே கடன் வழங்குனர்கள் அவற்றைப் பெறுபவர்களுக்கு சலுகை அடிப்படையில் நிபந்தனைகளை விதிக்கிறார்கள். இது வழமையான நடைமுறையாகும். இந்த பின்னணியில் பார்க்கும்போது இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேசம் கொடுத்த ஆதரவு எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மிகவும் குறைவானதாகும் அல்லது நியாயமானதாகக் கூறவில்லை.

'கடன் வழங்குனர்களைக் [illegible] இழப்பு அல்லது கடன் பெற்றவர்கள் திருப்பிச் செலுத்தவேண்டிய முதலில் செய்யப்பபட்ட குறைப்பு மீது கவனத்தைக் குவித்து கடந்த 200 வருடங்களாக அரசாங்கங்களின் வெளிநாட்டுக் கடன் நெருக்கடியை நாம் ஆராய்ந்தோம். நாம் எடுத்துக்கொண்ட மாதிரிகள் 1815 ஆம் ஆண்டில் இருந்து 327 கடன் மறுசீரமைப்புக்களையும் கடனைத் திருப்பிச் செலூத்துவதற்கு தவணை தவறிய 205 சந்தர்ப்பங்களையும் உள்ளடக்கியதாக இருந்தன. கடன் வழங்குனர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் பரந்தளவில் வேறுபட்டவையாக இருந்தன. ஆனால் புள்ளிவிபர பகிர்வு இரு நூற்றாண்டு காலத்தில் ( திருப்பிச் செலுத்தவேண்டிய முதலில் சராசரியாகச் செய்யப்பட்ட குறைப்பு சுமார் 45 சவீதமாக இருந்தது) குறிப்பிடத்தக்க அளவுக்கு நிலையானதாக இருந்தது' என்று கடந்த மாதம் ஜேர்மனியில் வெளியிடப்படட ஆய்வு ஒன்று கூறியது.

சர்வதேச ஆதரவு இலங்கை அதன் கடன் மறுசீரமைப்புக்கு பெருமளவுக்கு சிறந்த நிபந்தனைகளைப் பெற்றால் மாத்திரமே அர்த்தமுடையதாக இருக்கும்.

கடன் சுமையில் செய்யப்பட்ட குறைப்பு மக்களின் வாழ்வில் உடனடியாக தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கக்கூடிய பயன்கள் குறித்து எந்த தகவலும் இல்லை என்பதால் ஜனாதிபதியின் வெற்றிப் பேச்சு பொதுமக்கள் மத்தியில் பெரிதாக எடுபடவில்லை. நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற பட்டாசு வெடித்தல் கொண்டாட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவுக்கு மக்களின் பங்கேற்பு இருக்கவில்லை.

பெற்றோல் விலைக்குறைப்பு போன்று கட்டுப்படுத்தப்பட்ட அளவில் சில பாவனைப் பொருட்களின் விலைகளில் குறைப்பு இடம்பெற்றதைத் தவிர மற்றும்படி உடனடியாகவோ அல்லது குறுகிய காலத்திலோ மக்களின் பொருளாதார வாழ்வில் மாற்றம் எதுவும் ஏற்படப்போவதில்லை என்பதே உண்மை நிலையாகும்.

கடந்த இரு வருடங்களாக எந்த விதமான அதிகரிப்பும் இன்றி தேக்கநிலைச் சம்பளத்தை பெற்றுக் கொண்டிருப்பவர்கள் இரண்டு தொடக்கம் மூன்று மடங்காக அதிகரித்திருக்கும் அடிப்படை வாழ்க்கைச் செலவுடன் போராடவேண்டியிருக்கிறது. வாழ்க்கைச் செலவு அதாகரிப்புக்கும் வரி உயர்வுக்கும் எதிராக வீதிகளில் இறங்கி வன்முறைப் போராட்டங்களில் ஈடுபட்ட கென்யா நாட்டு மக்கள் கூட்டத்தைப் போலன்றி, அதிகப் பெரும்பான்மையான இலங்கை மக்கள் இடர்பாடுகளை பொறுத்துக்கொண்டு மௌனமாக வீடுகளுக்குள் இருக்கிறார்கள்.

### கைவசம் இருக்கும் பதில்

ஆனால், மாணவர் சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் மக்களின் பிரச்னைகளையும் மனக்குறைகளையும் பொதுவெளிக்கு கொண்டுவருகிறார்கள். பொலிசார் மேற்கொண்ட கண்ணீர்ப்புகைப் பிரயோகத்திலும் நீர்ப்பீரங்கி தாக்குதலிலும் முடிவடைந்த ஆசிரியர்களின் போராட்டம் இதற்கு ஒரு உதாரணமாகும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொருளாதார விரிவுரையாளராக இருக்கும் கலாநிதி அகிலன் கதிர்காமர் பின்வருமாறு எழுதுகிறார்.

'சமூகச் செலவினங்களை பேணிப்பாதுகாப்பதாக உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதிலும், சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழான சிக்கனத் திட்டம் தவிர்க்கமுடியாத வகையில் நிதியமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட 2023 ஆண்டறிக்கையில் பிரதிபலித்தவாறு, சமூகச் செலவினங்களின் உண்மையான பெறுமதியில் குறைப்புகளுக்கு வழிவகுக்கிறது. 2021 - 2023 காலப்பகுதியில் இலங்கையில் வாழ்க்கைச் செலவு 100 சதவீதத்தினால் அதிகரித்தது. அதை

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் மறைவு!





முன்னாள் லண்டன் நியூஹாம் பகுதியின் கவுன் சிலர், போலள் சத்தியநேசன் அவர்கள், 2024 ஜூலை 5ம் திகதி லண்டனில் காலமானார்.

அவர் சில காலமாக இதய நோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்தார். லண்டனில் மட்டுமல்ல இலங்கை சென் றிருந்த சமயத்திலும் நோய் வாய்ப்பட்டு, அங்கும் மருத் துவ மனையில் சிகிச்சை பெற்று திரும்பினார்.

1960 ஜூன் 17ம் திகதி யாழ்பாணத்தில் பிறந்த போல் சத்தியநேசன் யாழ். பரியோவான் கல்லூரியில் கல்விப யின்றார்.

இலங்கை அரசியல் நிலவரம் காரணமாக 1985 இல் பிரித்தானியாவுக்கு புகலிடக் கோரிக்கையாளராக புலம் பெயர்ந்த, போல் சத்தியநேசன், லண்டனில் இயங்கி வந்த அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து, புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும், தாயக மக்களுக்கும் உதவிகளை செய்யத் தொடங்கினார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துடன் (TRRO- The refugees rehabilitation organisation) இணைந்து பணி யாற்றியதன் காரணமாக, போல் சத்தியநேசன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஒரு ஆதரவாளராக மாறி, தோழர் போல் சத்தியநேசன் என அழைக்கப்பட்டார். பின்னர் அதன் ஒரு அங்கமாகவும் செயல்பட்டார்.

ஒரு முறை புலம் பெயர்ந்த தமிழர் குறித்து குறிப்பி டும் போது, 'ஊரில் எமக்கு உறவுகள், சொந்தங்கள் எல் லாம் இருந்தது, ஆனால் அரசியல் நிலையில் இரண் டாம் தரத்தில் இருந்தோம். இங்கிலாந்துக்கு நாங்கள் வரும்போது இங்கு உறவுகள் என யாரும் இல்லை. பெருமை எல்லாம் போய்விட்டது.' என்றார்.

இங்கிலாந்து வந்த போல் சத்தியநேசன், கல்வி கற்றுக் கொண்டே, மொழி தெரியாத தமிழருக்கு உதவ ஆரம் பித்தோடு ஆங்கிலேயரோடும் உறவை வளர்த்துக் கொண்டார்.

அவர் செய்த சமூக சேவைகளால் கிடைத்த நன்மதிப் பால், பிரிட்டன் தொழிலாளர் கட்சியின் அங்கத்தவ ராகி, நியூஹாம் கவுன்சிலின் கவுன்சிலரும், துணை குடி மைத் தூதருமாக பல காலம் தொடர்ந்து தேர்வு செய் யப்பட்டதுடன், சேவையாற்றி பலரது நன் மதிப்பை பெற்றார்.

14 வருடங்களுக்கு பின் பிரிட்டன் தொழிலாளர் கட்சி, மாபெரும் வெற்றியை ஈட்டிய அதே தினத்தில் போல் சத்தியநேசன், தன் வாழ்கை பயணத்திலிருந்து விடைபெற்றார். அந்த மாபெரும் வெற்றியை கொண் டாட அவரால் முடியாமல் போனது வருத்தமே!

போல் சத்தியநேசன் ஒருமுறை, போரினால் பாதிக் கப்பட்ட மாவட்டங்களில் உள்ள உள்ளூர் நிறுவனங்க ளுக்கு நிதியளிப்பதில் புலம் பெயர் சமூகம் முக்கியமான செயல்பாட்டைச் செய்கிறது. அவர்களின் பணம் தமிழ் சிவில் சமூகத்தை செயல்பட வைத்துள்ளது என புலம் பெயர் உதவிகளை மெச்சினார்.

'இலங்கையில் உறவினர்கள் உள்ளமையால், மக்கள் நிகழ்வுகள், அனாதை இல்லங்கள், கோவில்கள், தேவா லயங்களை என ஆதரிப்பதோடு, தம்மால் வாரி வழங்க வும் தயங்கவில்லை' என அவர் தமிழர் குறித்து பெரு மைப்பட்டார். அத்தோடு சமூகத்துக்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்ய அவர் ஒருபோதும் தயங்கியதே இல்லை.

நீண்டகாலமாக நியூஹாம் கவுன்சிலின் கவுன்சிலராக வும், துணை குடிமைத் தூதராகவும், சமூகசேவையாள ராகவும், ஜனநாயகத்திற்கும் நீதிக்குமான போராட்டங் களில் பங்கு கொண்ட ஒரு தீவிர செயற்பாட்டாளராக வும் இருந்த போள் சத்தியநேசனின் மறைவு ஈடு செய்ய முடியாதது.

போல் சத்தியநேசனின் சேவைகள் வரலாற்றில் மட் டும் அல்ல மக்கள் மனங்களிலும் என்றும் நினைவுகூரப் படும்.

**- ஜீவன்**

**வரலாற்றில் என்றும் நினைவுகூரப்படும்**

தோழர் போல் சத்தியநேசன் அவர்களின் மறைவு செய்தி தற்போது கிடைத்தது. அதிர்ச்சிதரும் தகவல். அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனைகள்.

சென்ற மாதம் - வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றத் தில் தேசிய மக்கள் சக்தியின் ஹரிணி அமரசூரிய வந்த போது - நானும் சிராப் தோழரும் அவரை புகையிரத நிலையத்தில் சந்தித்து - அவருடன்தான் பாராளுமன்றத் திற்குள் கடுமையான பாதுகாப்பு சோதனைகளை கடந்து - கூட்டத்திற்கு சென்றோம். பல விடயங்கள் பேசினோம். இந்த செய்தி நம்ப முடியவில்லை. அதற்க்கு முன்னர் புளொட் ராகவனின் அஞ்சலி கூட்டத்திலும் சந்தித்து பேசினோம்.

நீண்டகாலமாக உள்ளூராட்சி சபை உறுப்பினராக வும் - சமூகசேவையாளராகவும் ஜனநாயகத்திற்கும் நீதிக் குமான போராட்டங்களில் ஒரு தீவிர செயற்பாட்டாள ராகவும் இருந்த அவரது சேவைகள் வரலாற்றில் என்றும் நினைவுகூரப்படும்.

**- சாந்தன் கே. தம்பையா**

**ஓய்வொழிச்சல் இல்லாத சமூக சேவகர்**

போல் சத்தியநாதன் தனது பூர்வீக யாழ் உரும்பிராய் கிராமம் ஈழத் தமிழ் தேசிய சமூக விடுதலை பிரித்தானிய தொழிலாளர் கட்சி என பரந்த ஒரு தளத்தில் இயங்கிய வர் ஊரும் உலகமென அவரது உறவுகள்.

கிழக்கு லண்டன் ஈஸ்ட்கம் மாநகர சபையில் மக்க ளின் தெரிவாக உறுப்பினராகவும் பின்னர் மேயராகவும் கடமையாற்றியவர்.

ஓய்வொழிச்சல் இல்லாத சமூக சேவகர். பிரித்தானிய தொழிலாளர் கட்சியின் உற்சாகம் மிக்க அங்கத்தவர். தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் ஆரம்பகால செயற்பாட்டாளர். யாழ் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர்.

**- தோழர் சுகு சிறிதரன்**

---




# வியுக்தியார் பதில்கள்

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக் கும் செயற்பாடுகளை ஜனாதிபதி ரணில் முன்னெடுத்து வருகிறார் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாரா ளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித் துள்ளாரே. அவர் எப்போது ஒற்றையாட்சிக்கு வெளியே தமிழர் பிரச்சினைக்கு தீர்வு என்று சொல்லியிருக்கிறார். மனுசன் பதின்மூன்றையே முழுசாக தரமாட்டேன் என்று தானே சொல்கிறார். அப்படியிருக்க அவர் ஒற்றையாட் சிக்குள் முடக்கப்பார்க்கிறார் என்று ஏன் இவர் சொல்கி றார் என்று தெரியுமா?

**வியுக்தியார்:** இதுவரை காலமும் முன்னணிக்கு எதி ராக அரசியல் செய்யும் தமிழ் தேசியக்கட்சிகள் மீதே அவர்கள் இப்படியொரு குற்றச்சாட்டை முன்வைத்து வந்திருக்கின்றனர். இப்போது ரணில் மீது அதே குற்றச் சாட்டை முன்வைப்பதற்கு என்ன காரணம் என்பதை என்னிடம் கேட்டா நீங்கள் தெரிந்துகொள்ளவேண் டும்?. அடுத்து நடக்கவிருப்பது ஜனாதிபதி தேர்தல் தானே. அதில் தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிக்கக் கூடாது என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லையா? அவர்கள் எப்போ தும் இந்தியா விரும்புகின்ற ஒருவரை ஆதரிக்க மாட் டார்கள்தானே. அவர்களது தெரிவு எப்போதும் இந்தி யாவுக்கு எதிரானவர்களை வெல்ல வைப்பதுதானே. அதுதான் அவர்கள் ரணிலுக்கு எதிராக இப்போது பேசத் தொடங்கியிருக்கின்றனர் என்று நினைக்கிறேன்.

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** இந்திய கடற்றொழிலாளர் விவகாரத்துக்கு தீர்வு காண இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய் சங்கர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும், இதற்காக, தன்னை புதுடில்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள் ளார் என்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளாரே. இனி அந்தப் பிரச்சினை தீர்ந் துவிடும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** இப்படித்தான் பல வருடங்களுக்கு முன் னர், நமது ஆயுத இயக்கங்கள் தீவிரமாகப் போராடிக் கொண்டிருந்தபோது, தமிழ் ஈழம் கிடைத்துவிடும் என்று நாம் எல்லாம் நம்பிக்கொண்டிருந்தபோது, நமது விடு தலை இயக்கங்களை புதுடில்லிக்கு அழைத்திருந்தார்கள். புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட அனைத்து இயக் கத் தலைவர்களும் அங்கே அழைக்கப்பட்டு கடைசியில் பதின்மூன்றை தலையில் கட்டி விட்டார்கள். அந்தச் சம் பவம்தான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது. அது கூட பரவாயில்லை, எங்கள் பிரச்சினைக்கு மாகாணச பைகள் நல்ல தீர்வு என்று சொல்லி, எங்கள் பாதுகாப் புக்கு தாங்கள் பொறுப்பு என்றும் சொல்லி, நமது இயக் கங்களிடமிருந்து ஆயுதங்களையும் [illegible]ண்டார் [illegible] நமது ஆதி சிவனை வழிபடக்கூட உரிமை அற்றவர்களாக நாங்கள் இருக்கின்றபோது, மாகாணசபைகளில் அதிகாரங்களை தர இலங்கை அரசு மறுக்கின்றபோது கண்டும் காணா மல் இருக்கிறார்களே. அவர்கள் இப்போது மீனவர் பிரச்னை பற்றி பேச புதுடில்லிக்கு அழைத்திருப்பதுதான் சந்தேகத்தை தருகின்றது.

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** அண்மையில் மறைந்த தமிழ் அரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் மறைவு குறித்து வடக்கு மாகாண அவைத்தலைவர் சிவிகே சிவஞானம் ஐயா வெளியிட்டுள்ள அஞ்சலி அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளளார்: 'தந்தை செல்வாவால் தேடி அரசிய லுக்கு கொண்டு வரப்பட்டபோது சம்பந்தன் ஐயா திரு மலையில் பெரும் வருமானம் ஈட்டும் சட்டத்தரணியாக சட்டத்துறையில் திகழ்ந்தவர். அவ்வாறான வருமானத்தை முழுமையாக கைவிட்டே 1977ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு பாராளுமன் றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.' இப்படி அவர் சொல்வது சரி என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** சிவஞானம் ஐயா மீது இந்த வியுக்தியா ருக்கு மரியாதை அதிகம். ஆனாலும் அதற்காக அவர் பிழையாக வரலாற்றை பதிவுசெய்கின்றபோது, அதனை அப்படியே பார்த்துக்கொண்டும் இருக்க முடியாது அல் லவா? தந்தை செல்வா காலத்திலேயே சம்பந்தன் ஐயா தமிழ் அரசு கட்சியுடன் இணைந்து அவர்களின் அறவ ழிப்போராட்டங்களில் கலந்துகொண்டது என்னவோ உண்மைதான். ஆனால், அவரை நேரடி அரசியலுக்கு வலுக்கட்டாயமாக அழைத்துவந்தவர், அ. அமிர்தலிங் கம் அவர்கள்தான். அதுகும் 1977ல், தமிழ் அரசு கட்சி யும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் ஒன்றாக இணைந்து தமி ழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்த பின்னர். அப் போது தந்தை செல்வா உயிருடனும் இல்லை. அவர் தமிழ் அரசு கட்சி சார்பில் போட்டியிடவும் இல்லை. அந்தக் காலத்தில் தமிழ் தேசிய அரசியலுக்கே வராத தால், சிவஞானம் ஐயாவுக்கு இவை எல்லாம் தெரியா மல் இருந்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் மீண்டும் தொழிற்கட்சி: ரிஷி சுனக்கின் எதிர்பார்க்கப்பட்ட தோல்வி! ஈழத்தமிழ் பெண் எம்.பியின் வெற்றி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

2024 பிரிட்டன் பொதுத் தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றிப் பெற்றுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய பிரதமராக தொழிற்கட்சியுன் கியர் ஸ்டார்மர் (Keir Starmer) பதவியேற்கவுள்ளார்.





**யார் இந்த கியர் ஸ்டாமர்?**

தொழிலாளர் கட்சியின் புதிய தலைவராக கியர் ஸ்டாமர் ஏப்ரல் 2020இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்டார்மருக்கு 61 வயது தான். வழக்கறிஞரான கியர் ஸ்டாமர், 2015ஆம் ஆண்டு முதல் முறையாக எம்.பி.யானார்.

தொழிலாளர் கட்சியின் தலைவருக்கான தேர்தலின்போது, முதல் சுற்றிலேயே கியர் ஸ்டாமர் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தார்.





தொழிற்கட்சியின் தலைவரான பிறகு, இந்த மாபெரும் கட்சியை புதிய நம்பிக்கையுடன் ஒரு புதிய சகாப்தத்தை நோக்கி அழைத்துச் செல்வதே தனது நோக்கம் என்று தெரிவித்திருந்தார்.

**ரிஷி சுனக் வரலாறு காணாத தோல்வி:**

நடந்து முடிந்துள்ள தேர்தலில் ரிஷி சுனக் கட்சிக்கு மிகப் பெரிய தோல்வி கிடைத்துள்ளது. 2022 ஆண்டில் பிரிட்டனில் சில வார இடைவெளியில் இரண்டு பிரதமர்கள் விலகிய நிலையில், அப்போது அங்கே அரசியல் ரீதியாக மிகப் பெரிய குழப்பம் ஏற்பட்டது. அப்போது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் பிரிட்டன் பிரதமராகப் பொறுப்பேற்றார்.

இளம் வயது பிரதமர், முதல் இந்து பிரதமர் எனப் பல சிறப்புகளை இவர் உலகளவில் அடையாளத்தை பெற்றார். ஆயினும் பிரிட்டன் கடுமையான நெருக்கடியில் சிக்கித் தவித்த நிலையில், அதைச் சரி செய்ய ரிஷி சுனக் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கத் தவறினார்.

ரிஷி சுனக் ஆட்சியில் பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக மோசமான ஒரு பொருளாதார சூழல் நிலவியது. இதனால் அங்கே ஆளும் அரசு மீது மக்களிடையே மிகப் பெரிய கோபம் நிலவியது. அதுவே இப்போது ரிஷி சுனக்கிற்கு பெரும் தலைவலியாக மாறி, பாரிய படுதோல்வியை சந்தித்துள்ளார்.

**தொழிற் கட்சி பெரும்பான்மை:**

இந்த பிரிட்டன் பொதுத் தேர்தலில் ஆட்சியமைக்க தேவையான 326 இடங்களை தொழிலாளர் கட்சி கைப்பற்றிள்ளது.

தற்போதைய நிலையில் தொழிலாளர் கட்சி 411 இடங்களிலும், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கின் கன்சர்வேடிவ் கட்சி 119 இடங்களிலும், லிபரல் டெமாக்ரடிக் கட்சி 71 இடங்களிலும் வெற்றிப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் செல்வாக்கு குறைந்துள்ளதாகவும் தொழில் கட்சி வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக பல கருத்துக் கணிப்புகள் முன்பு வெளியாகின. அதற்கேற்ப இந்த தேர்தலில் தொழில் கட்சி வெற்றிபெற்று 14 ஆண்டுகளின் பின்னர் பிரித்தானியாவில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 14 ஆண்டுகளாக கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி இருந்தது. பலமுறை கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடு மற்றும் ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் விலகியமை உள்ளிட்ட காரணங்களால் பிரதமர்களும் மாறினர்.

பிரதமராக இருந்த ரிஷி சுனக் மீது மக்கள் பெரும் எதிர்பார்ப்பை ஆரம்பத்தில் வைத்திருந்த போதிலும் பின்னர், அவரது செல்வாக்கு கடுமையாக சரிந்தது என கருத்துக் கணிப்புக்கள் முன்னரே தெரிவித்தன.

**ஈழத்தமிழ் பெண் வெற்றி:**



இம்முறை முதல் முறையாக பிரித்தானிய பொதுத் தேர்தலில் பல தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடும் வாய்ப்பை பெற்றனர்.

நடந்து முடிந்த தேர்தலில் 8 தமிழர்கள் வேட்பாளர்களாக போட்டியிட்டு இருந்தனர். உமா குமரன், கவின் ஹரன், மயூரன் செந்தில் நாதன், கமலா குகன், டெவினா பால், நரணி ருத்ரா ராஜன், கிரிஷ்ணி, ஜாஹிர் உசேன் ஆகியோர் பிரித்தானிய நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிட்டியிட்டிருந்தனர்.

இவர்களுள் தொழிலாளர் கட்சியின் சார்பாக உமா குமாரன் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். வரலாற்றில் முதல் முறையாக பிரித்தானியாவில் தமிழர்கள் பொதுத் தேர்தலில் போட்டியிட்டதால் உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் இந்தத் தேர்தலை உற்று நோக்கி வந்தனர்.

**உமா குமரன் வெற்றி :**

இந்நிலையில், 19,145 வாக்குகளை பெற்று உமா குமரன் பெரும் வெற்றியடைந்துள்ளார். இந்த வெற்றியின் மூலம் பிரித்தானிய வரலாற்றில் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வரலாற்று சாதனையை உமா குமரன் படைத்துள்ளார்.


எதிர்த்துப் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்களையும் விட பல மடங்கு அதிக வாக்குகளைப் பெற்று உமா குமரன் வெற்றி பெற்றுள்ள இவ்வரலாற்று சாதனையை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதே வேளை லிபரல் கட்சி வேட்பாளரான லூக் டெயிலர் 17,576 வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்துள்ளார். கான்சர் வேட்டிவ் கட்சி சார்பில் போட்டியிட்ட டாம் 13,775 வாக்குகளைப் பெற்றுள்ள நிலையில் தொழிலாளர் கட்சி சார்பில் போட்டியிட்ட ஈழத்தமிழ் பெண் வேட்பாளரான கிருஷ்ணி 8,430 வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஈழத் தமிழர் ஆதரவு :**

பிரித்தானிய தேர்தலில் ஈழத் தமிழர் ஒருவர் வெற்றிபெற்றுள்ளமையால், அது இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் நகர்வுகளுக்கு வலுவாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் எதிர்பாரக்கின்றனர்.

அத்துடன் தொழில் கட்சி தமது தேர்தல் அறிக்கையில் இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் முக்கிய அவதானம் செலுத்தியிருந்தது.




உலக அரங்கில் கனடாவின் அரசியலில் தமிழர்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களை பெறும் சந்தர்ப்பங்களும் உருவாகியுள்ளது. கடந்தமுறை ஹரி ஆனந்த சங்கரி நாடாளுமன்றத்துக்கு தெரிவானதுடன், அமைச்சுப் பொறுப்புக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் தமிழ் மக்கள் ஓரளவு அரசியல் செல்வாக்கு உள்ளவர்களாக உள்ளனர். இம்முறை அமெரிக்க தேர்தலிலும் சில தமிழர்கள் போட்டியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு நாட்டிடமும் கடன் பெறவில்லையாம்

## சொல்கிறார் அமைச்சர் மனுஷ

கொழும்பு, ஜூலை 07

இலங்கை வங்குரோத்து நிலையை எதிர்கொண்டு எந்தவொரு நாட்டிடமும் கடன் பெறவில்லை என்பதை தெரிந்திருந்தும் நாட்டின் கடன் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சிகள் மக்களை ஏமாற்றி வருவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஹக்மன டெனி அபேவிக்கிரம விளையாட்டரங்கில் நடைபெற்ற 'ஜயகமு சிறி லங்கா' மக்கள் நடமாடும் சேவை யில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு,

நாங்கள் வங்குரோத்து அடைந்த பிறகு எந்தவொரு நாட்டிலிருந்தும் கடன் பெறவில்லை. இருப்பினும், சில அரசியல்வாதிகள் கடன் அதிகரித்துள்ளதாக பகிரங்க மாக கூறுகின்றனர். எங்கள் கடன்கள் டொலர்களில் கூறப்படும்போது கடன் ஏற்ற இறக்கமாக இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் இவ்வாறு பொய்ப் பிரசாரங்களை செய்து மக்களைத் தவறாக வழிநடத்துகின்றனர்.

ஊட்டச்சத்து குறைபாடு நல்லதா? கெட்டதா? என பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். இந்தக் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு ஏற்ப டக்கூடாது என்பதற்காக குழந்தைகளின் பெற்றோர் வெளிநாடு சென்று பணம் அனுப்புகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தக் குழந்தைகளை நேசிப்பதால் ஆறுதல் மற்றும் சோறு கொடுக்கிறார். நாட்டின் துரதிர்ஷ்டங்களை மாற்றி நல்லவர்களாக மாற்ற முயற்சிக்கிறோம். எமது பிள்ளைகளின் பெற்றோர் வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பிய போது, ராஜ பக்ஷக்கள் திருடுவார்கள் அனுப்ப வேண்டாமென ஜே. வி. பியினர் கூறினார்கள்.

ஆனால், அப்பெற்றோர்கள் அதை நம்பாமல் தங்கள் பிள்ளைகள் மற்றும் நாட்டின் மீதுள்ள அன்பினால் 12 பில்லியன் டொலர்களை இந்த நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதனால், தான் இந்த நாட்டு மக்கள் மீண்டும் உணவும் பானமும் பெற முடிந்தது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் போன்ற ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டமும் எதிர்க்கப்பட்டது. சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது, மொனாஷ் பல்கலைக்கழகம் இலங்கைக்கு வந்தது. ஆனால், தனி யார் கல்வியை அனுமதிக்க முடியாது என்று கூறி அப் போது அனுமதிக்கப்படவில்லை. அந்தப் பல்கலைக்கழ கம் மலேசியாவுக்கு கொண்டு செல்லப்பட்டது. இன்று அது மலேசியா பிராந்தியத்தில் ஒரு கல்வி மையமாக மாறியுள்ளது. அந்தப் பல்கலைக்கழகம் பில்லியன் கணக் கான டொலர்கள் வருவாயை ஈட்டுகிறது. ஜே. வி.பியின் செயல்பாடுகள் இவ்வாறு தொடர்ந்தால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது- என்றார். (எ)



### மின் கசிவால் உணவகம் தீக்கிரை!

கண்டி, ஜூலை 07

அக்குறணை பகுதியில் உணவகத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்கு கட்டடத்தின் பேக்கரியிலுள்ள மின்சார அடுப்புகளுக்கு மின்சாரம் வழங்கும் அமைப்பில் ஏற் பட்ட மின் கசிவே காரணமாக இருக்கலாம் என பொலி ஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தீ விபத்து தொடர்பில் மேலதிக விசாரணை களை அலவத்துகொட பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

இந்தத் தீ விபத்தில் உணவகத்துக்கு அருகாமையி லுள்ள விற்பனை நிலையம் மற்றும் சர்வதேச பாடசாலை உட்பட பல கடைகள் சேதமடைந்ததாக பொலிஸார் கூறினர்.

அக்குறணை நகரில் அமைந்துள்ள இந்த உணவகத் தில் நேற்று முன்தினம் காலை 6. 30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்து காரணமாக கண்டி - மாத்தளை (ஏ -9) வீதியும் தற்காலிகமாக மூடப்பட்டது. கடும் முயற்சிக் குப் பின் காலை 10 மணியளவில் தீ அணைக்கப்பட்டது. இந்தத்

தீ விபத்தில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை என் பது குறிப்பிடத்தக்கது. (எ)

### ஆமணக்கு விதைகளை உட்கொண்ட 7 மாணவர்கள் மருத்துவமனையில்

வெலிகந்த, ஜூலை 07

பொலநறுவை, திம்புலாகல கல்வி வலயத்துக்குட் பட்ட வெலிகந்த, அசேலபுர பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் மாணவியொருவர் கொண்டு வந்த ஆமணக்கு விதைகளை உட்கொண்டு சுகயீனமுற்ற 7 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம் பெற்றது.

9, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் கல்வி கற்கும் 4 மாணவர்களும் 3 மாணவிகளுமே இவ்வாறு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சுகயீனமடைந்த மாணவர்களின் உடல் நிலை கவலைக்கிடமாக இல்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

# நாட்டின் எதிர்காலத்துக்காக...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் டொலர்களின் அடிப்படையில் நோக்குவோமே யானால், இலங்கை ரூபாவின் பெறுமதி 50 சதவீதத்தி னால் ( டொலருக்கு நிகராக 200 ரூபாவில் இருந்து 300 ரூபாவுக்கு) வீழ்ச்சி கண்டது. ஆனால், இந்த காலப்பகுதி யில் பொதுக் கல்விக்கான அண்ணளவான செலவின அதிகரிப்பு 22.5 சதவீதம் மாத்திரமே. உயர்கல்விக்கான அதிகரிப்பு வெறுமனே 13.1 சதவீதம் மாத்திரமே.

எளிய வார்த்தைகளில் கூறுவதானால், கல்விக்கான பட்ஜெட்டில் சம்பள அதிகரிப்புகளை வழங்குவதற்கு பணமில்லை அல்லது கடந்த காலத்தில் ஆசிரியர்க ளுக்கு வழங்கிய உறுதிமொழிகளை அரசாங்கத்தினால் நிறைவேற்றமுடியாமல் இருக்கிறது.

பல தசாப்தங்களாக இலங்கை கல்விக்கான செலவி னத்தை குறைத்துக்கொண்டே வந்திருக்கிறது என்று கலாநிதி அகிலன் கதிர்காமர் மேலும் கூறுகிறார். உண் மையில் கல்விக்கான செலவினம் படுமோசமாகக் குறைந்து வந்திருக்கிறது. 1970 ஆம் ஆண்டில் கல்விக் கான செலவினம் உள்நாட்டு நிகர உற்பத்தியில் 5 சத வீதத்துக்கு நெருக்கமாக இருந்தது. அது 2022 ஆம் ஆண்டில் 1.2 சதவீதமாக இருந்தது. கல்விக்கான செலவி னங்களைப் பொறுத்தவரை உலகில் மிகவும் குறைந்த செலவினங்களில் இது ஒன்று.

ஜனாதிபதி அறிவித்தவாறு கல்வி தொடர்பான அரசாங்கத்தின் தற்போதைய அணுகுமுறை தனியார் துறையிடம் கையளிப்பதாகவே இருக்கிறது. ஆனால் கல்விச் சேவைகளை வழங்குவதில் இருந்து அரசாங்கம் வாபஸ்பெறுவது, ஒரு சமூகசேவையாக இல்லாமல் இலாபம் சம்பாதிக்கும் நோக்குடன் கல்வி வர்த்தகமய மாகிவரும் பின்னணியில் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு பெரும் பாதிப்பாக அமையும். பாரதூரமான பொருளாதார இடர்பாட்டின் பொது வான பின்புலத்தில் நோக்கும்போது பொருளாதார ரீதி யில் பின்தங்கியவர்களாக இருக்கும் மக்கள் பிரிவினரின் கல்விக்கான அரசாங்கத்தின் முதலீடு கூடுதலாக அதிக ரிக்கப்படவேண்டிய தேவை இருக்கிறது.

தங்களது பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு அர சாங்கம் தவறியதை கண்டித்தே கடந்தவாரம் ஆயிரக்க ணக்கில் ஆசிரியர்கள் வீதிகளில் இறங்கிப் போராடி னார்கள். எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு இளந்தலைமுறையினருக்கு போதித்து அவர்களை தயார் செய்யும் தலையாய பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டிருக்கின்ற போதிலும் இன்று மிகவும் குறைந்த சம்பளத்தைப் பெறுகின்ற பிரிவினராக ஆசிரி யர் சமூகத்தினரே விளங்குகிறார்கள்.

அவர்களை பாதுகாப்பு படையினர் கண்ணீர்ப்பு கைப் பிரயோகம் செய்தும் நீர்ப்பீரங்கித் தாக்குதல் நடத்தியும் கலைக்கிறார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களை கடுமையாக நடத்துவது அரசாங்கத்தைக் கேள்விகேட்ப தற்கான ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துவதற்காக ஒன்றுகூடுகிறவர்களை கையாளுவதற்கு கைவசம் வைத் திருக்கும் பதிலாக இருக்கிறது.

நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பின் பின்னணி யில் இருக்கும் முக்கியமான ஆளுமை என்ற வகையில் ஜனாதிபதி விக்கிரமசிங்க ஆர்ப்பாட்டம் செய்பவர்களு டன் அல்லது அவர்களின் தலைவர்களுடன் பேசி அவர் களின் குறைகளைக் கேட்டறியவேண்டியது முக்கியமா னதாகும். அவர்கள் தங்களது மனக்குறைகளை வெளிப்ப டுத்துவதற்கு வாய்ப்பைக் கொடுக்கவேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் உடன்படிக் கைகளை செய்யும்போது அரசாங்கம் மக்களினதும் எதிரணி அரசியல் கட்சிகளினதும் நம்பிக்கையை வென் றெடுக்க வேண்டியதும் அவர்களின் ஆதரவைப் பெற வேண்டியதும் முக்கியமானதாகும். தீர்வுகள் காலத்தின் சோதனைக்கு தாக்குப்பிடிப்பதற்கும் நிலைபேறானவை யாக அமைவதற்கும் இது மாத்திரமே ஒரே வழியாகும்.

# தமிழர் அரசியலில் சம்பந்தனின்...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தை ஆதரிக்கும் ஒருவராகவே சம்பந்தன் நடந்துகொண்டார் என்று விமர்சனங்கள் எழுந்தன.

அந்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பு ஒன்றை வரையும் செயன்முறையை முன்னெடுத்ததால் அதில் ஒத்துழைத்து தேசிய இனப்பிரச்சினைக்கு உச்சபட்ச அதிகாரப் பரவலாக்கம் மூலமாக அரசியல் தீர்வொன் றைக் காணலாம் என்ற நம்பிக்கையில் சம்பந்தன் அவ்வாறு நடந்துகொண்டிருக்கக்கூடும். ஆனால் இறுதியில் அவ ருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. முன்னைய தமிழ்த் தலை வர்களுக்கு நேர்ந்த அனுபவமே சம்பந்தனுக்கும் ஏற்பட் டது. அவரது தலைமைத்துவம் நடைமுறைச் சாத்திய மான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு சிங்கள தலைவர்களுக்கு சிறந்த வாய்ப்பை வழங்கியது என்று நம்பியவர்கள் பலர்.

இது இவ்வாறிருக்க, தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமையாக வைத்திருக்க சம்பந்தன் தவறிவிட்டார் என்பதே தமிழர் அரசியல் அவரின் தலைமைத்துவத் தின் கீழ் இருந்த கடந்த இரு தசாப்தங்களில் அவரின் செயற்பாடுகள் குறித்து முன்வைக்கப்படும் முக்கியமான விமர்சனமாகும்.

போர் முடிவுக்கு வந்த பிறகு தமிழ் மக்கள் மத்தியில் கட்டுறுதியான அரசியல் சமுதாயம் ஒன்று இருக்கவில்லை. அடுத்து வந்த சகல தேர்தல்களிலும் தமிழ் தேசிய கூட்ட மைப்புக்கு வாக்களிப்பதை தவிர வடக்கு, கிழக்கு தமி ழர்களுக்கு வேறு அரசியல் மார்க்கம் இருக்கவில்லை.

தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் ... அடுத்த கட் டத்துக்கு நகர்த்தவேண்டிய வரலாற்றுப் பொறுப்பைக் கொண்டிருந்த கூட்டமைப்பு சம்பந்தனின் முன்னா லேயே சீர்குலைந்தது. அவரால் குறைந்த பட்சம் தனது இலங்கை தமிழரசு கட்சியையேனும் ஐக்கியமான ஒரு அரசியல் சக்தியாக வைத்திருக்கவும் முடியாமல் போய் விட்டது.

இன்று தமிழர் அரசியல் சமுதாயம் சிதறுண்டு கிடக் கிறது. பல கட்சிகள், பல தலைவர்கள். முன்னென்றும் இல்லாத வகையில் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை அவசியமாக இருக்கின்ற ஒரு நேரத்தில் அவர் கள் இயன்றவரை பிரிந்து நின்று செயற்படுவதிலேயே முனைப்புக் காட்டுகிறார்கள். இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமை குறித்து சம்பந்தன் கவலையடைந்த ஒரு மனிதனாகவே இறுதிமூச்சை விட்டிருக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட..

பின்னாளில், ஊடகவியலாளராகவும் இராஜதந்திரி யாகவும் விளங்கிய அவர், நெதர்லாந்து, பிரான்ஸ் நாடு களின் தூ துவராகவும் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியா...

எட்டப்பட்ட நிலையில் இந்தத் திட்டம் தொடர்பான பேச்சுகள் இறுதிக் கட் டத்தை எட்டியுள்ளன.

இந்தத் திட்டம் நடைமுறையாகும் போது, சென்னை - அநுராதபுரம் இடையே 200ஜிகா வோட்ஸ் மின்சாரம் தேசிய கட்ட மைப்பில் இணைக்கப்படும் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## கிளிநொச்சி...

உயிரிழந்தார்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கெப் ரக வாகனமும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கி ளும் மோதியே இந்த விபத்து இடம் பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்த நிலையில், விபத்தில் கெப் வாகனமும் கவிழ்ந்தது. இதனால், அதில் பயணித்த மூன்று பேர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள னர்.பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வெள்ளை...

இனப்பிரச்னையில் சிறுபான்மைச் சமூ கங்களுக்கும் உச்சபட்ச அரசியல் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக தனது வாழ் நாள் பூராவும் அயராது பாடுபட்ட அர சியல் ஆளுமையான சம்பந்தனுக்கு அஞ் சலி செலுத்த இலங் கையர்களான நாம் கடமைப்பட்டுள்ளோம்.

திருகோணமலை மக்களுக்கும் தமிழ் அரசுக் கட்சிக்கும் தமிழ் தேசியக் கூட்ட மைப்பிற்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளும் இந்த சந்தர்ப் பத்தில் அவரின் மக்கள் பணியையும் - அரசியல் சேவைகளையும் கௌரவிக் கும் விதமாக நல்லிணக்கத்தின் வெளிப் பாடாக அவரது இறுதிக்கிரியை நடை பெறும் இன்றைய தினம் கிழக்கின் சகல பிர தேசங்களிலும் வெள்ளைக் கொடி களை பறக்கவிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்தவேண்டும் - என்றுள்ளது.(ஐ-6)

## தென்மராட்சி...

இந்த போராட்டத்துக்கான முன் னேற்பாட்டு கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இதில் தென்ம ராட்சியை சேர்ந்த பல்வேறு வர்த்தக, சிவில் அமைப்புகளும் கலந்து கொண் டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கட்சிகளை..

சந்திக்க நேரிடும்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் பிளவு காரணமாகவே உடைந்துள்ளது. மேலும், கட்சிகளை பிளவுபடுத்துவது அல்ல, ஒன்றுபட்டு வலுவாக நிற்பது தான் இந்த சந்தர்ப்பத்தில் நாம் செய்ய வேண்டிய விடயம் - என்றும் கூறினார். (ஐ)

## வாகனத்தால்...

கொண்டிருந்துள்ளார். அந்தச் சமயம் வாக னம் ஒன்று சென்றதையடுத்து, "என்னை வாகனத்தால் மோதிவிட்டு செல்கின்ற னர்", என்று அவர் சத்தமிட் ஸ்ரீடுள்ளார்.

அவரின் குடும்பத்தினர் விரைந்து அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்த னர். எனினும், அவர் மருத்துவமனை யிலேயே உயிரிழந்து விட்டார்.

இதனிடையே, குடும்பத்தினர் சென்ற போது விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப் படும் வாகனம் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டது.

உயிரிழந்த பிறேம்குமார் ஒரு கால் மற்றும் ஒரு கையை இழந்தவர் என்ப தும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெருந்தலைவர்...

தொடர்ந்து அன்னாரின் பூதவுடல் தகனத்துக்காக பிற்பகல் 3மணியளவில் திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இரா. சம்பந்தனின் இறுதி ஊர்வ லத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர் கள், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் வாதிகள், இராஜதந்திரிகள், மத குருமார் கள், கல்விச் சமூகத்தினர், சிவில் அமைப் புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் பங்கேற்பர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

## பிரித்தானியாவின்...

அப்பட்டமான பொய்களுக்கு ஏமாந்து இலங்கைக்கு எதிரான அரசியல் வாதியாக தொழில் கட்சியின் முன்னாள் தலைவர் ஜெரமி கோர்பினும் புதிய பிரதமரும் மாறியதே இதற்கு காரணம்.

இலங்கையின் வடக்கில் தமிழீழ அரசை அமைப்பதற்கான போராட் டத்துக்கு புலம்பெயர் தமிழர்களுக்கு வாழ்த்து தெரிவித்து கடந்த காலங்களில் பல அறிக்கைகளை வெளியிட்டார். புலம்பெயர் தமிழர்களின் அழைப் பின்பேரில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தொழிலாளர் தலைவர் வெளியிட்ட காணொலியில், இலங்கை போரின் இறுதிப் பகுதியில் கொடூர மாகக் கொல்லப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழர்களை நாங்கள் மரியாதையுடன் நினைவு கூருகிறோம். தொழிலாளர் கட்சி எப்போதும் தமிழ் மக்களுடன் உள்ளது. இந்த நேரத்தில் நாம் அவர்களை மரியாதையுடன் நினைவு கூர்வதுடன் உண்மையை அறிந்து பொறுப்புக்கூறலை நாட வேண்டும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் இந்த மனித உரிமைகளை மீறிய குற்றவாளி களை சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று தொழிலாளர் கட்சியாக மீண்டும் உறுதியளிக்கிறோம். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை பின்பற்றி, தமிழ் சமூகத்து டன் ஒன்றிணைந்து இந்த கொலையாளி களை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு பிரித்தானிய அரசை கேட் டுக்கொள்கிறோம் - என்று கூறியிருந் தார்.


இதேபோன்று, தைப்பொங்கல் செய்தியில், "இலங்கையில் சுயநிர்ண யம், சமாதானம் மற்றும் நீதிக்காக தமிழ் மக்கள் செய்த தியாகங்களை நாம் நினைவுகூர வேண்டிய தருணம் இது வாகும். இலங்கை அரசாங்கம் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத் துக்கான தனது ஆதரவை மேலும் தாமதப்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு, ஐக்கிய இராச்சிய அரசாங் கத்தின் தெளிவான பொறுப்பில் செயல் படுமாறு தொழிற்கட்சி தொடர்ந்து வலியுறுத்துகிறது.

கடந்த ஆறு வாரங்களாக புலம் பெயர் தமிழர்கள் இரவு - பகலாக வீடு வீடாகச் சென்று தொழிலாளர் கட்சிக்கு ஆதரவாக வாக்குக் கேட்டு வந்திருக்கின் றனர். கடந்த வாரம் லண்டன் நீதிமன் றம், விடுதலை புலிகள் மீதான பிரித்தா னியாவின் தற்போதைய தடையை நீக்கு வதற்கு புலம்பெயர்ந்த தமிழர் களின் அவநம்பிக்கையான முயற்சியை, முன் னைய கன்சர்வேடிவ் அரசாங்கத்தின் வழக்கறிஞர்கள் வெற்றிகரமாக வாதிட் டதையடுத்து, கடந்த வாரம் தூக்கி எறிந்தனர். ஆனால், இன்று ஆட் சிக்கு வந்துள்ள தொழில் கட்சி சில மாதங்க ளிலேயே இந்த தடையை மன முவந்து நீக்கி தமிழீழத்துக்கான பாதையை திறந்து விடும் என்று இங்குள்ள பல இலங்கையர்கள் கூறுகின்றனர்.

தொழில் கட்சி அரசின் உதவியால் தமிழீழ கனவை 10 ஆண்டுகளில் நிறைவேற்றி விடலாம் என்று விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள் நினைக்கின் றனர். எனவே, தொழில் கட்சி அரசாங் கத்தின் கீழ் லண்டனில் என்ன நடக்கி றது என்பது குறித்து இலங்கை அரசாங் கம் மிகவும் கவனமாக இருக்க வேண் டும் - என்றுள்ளது. (ஐ)

# சிங்கள தேசம் ஒருபோதும் யாசகம் கேட்டுச் செல்லாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க




கொழும்பு, ஜூலை 07

உலகத் தலைவர்களிடம் சிலர் பணம் கேட்க சொல்கிறார்கள். ஆனால், சிங்கள தேசம் ஒருபோதும் யாசகம் கேட்டுச் செல்லாது. தன்னம்பிக்கையால் முன்னே றக்கூடிய தேசமாகவே திகழ்கிறது - இவ்வாறு கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன், நாட்டில் புதிய அரசியல் மற்றும் பொருளாதார முறைமை உரு வாக வேண்டும். அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு அச்சமின்றி உண்மை யைப் பேசக்கூடிய தலைவர்கள் அரசியல் கட்டமைப்பில் உருவாக வேண்டும் எனவும் கூறினார்.

தேசிய வங்கியாளர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த வங்கியாளர் மாநாட் டில் பேசியபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

மேலும், நாடு எதிர்நோக்கும் பொரு ளாதார சவாலை அச்சமின்றி மக்களுக்கு எடுத்துக்கூறி, நாட்டை நெருக்கடியிலி ருந்து மீட்பதற்கு தகுந்த வேலைத்திட் டத்தை முன்வைத்துள்ளேன்.

அதற்கு மாறான வேலைத்திட்டங்கள் எவையும் நாட்டுக்கு கிடையாது. கனவுலகில் இருப்பதை விடுத்து நாட்டுக்குத் தேவையான வேலைத் திட்டத்தை அடையாளம் கண்டு செயல் படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை முன்னேற்றி செல்ல வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

சிலர் ஆர்ஜென்ரீனாவின் மார்ட்டின் குஸ்மானை முன்மாதிரியாகக் கூறினா லும், அவர் தோல்வியடைந்தவர். சிலர் உலகத் தலைவர்களிடம் பணம் கேட்கச் சொல்கிறார்கள். ஆனால் சிங்கள தேசம் ஒருபோதும் யாசகம் கேட்டுச் செல் லாது. தன்னம்பிக்கையால் முன்னேறக் கூடிய தேசமாகவே திகழ்கிறது.

ஏற்றுமதிப் பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டு நாட்டில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவதே எனது நோக்கம். ஏற்றுமதிப் பொருளா தாரத்தை உருவாக்குவதற்கான சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அந்த வேலைத்திட்டத்தை முன்னோக்கிக்கொண்டு செல்வதில் வங் கிக் கட்டமைப்புக்கு முக்கிய வகிபாகம் உள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# தோல் அரிப்பு, உடலில் தழும்புகள் 9 மாணவிகள் திடீரென பாதிப்பு

குருநாகல், ஜூலை 07

குருநாகல் பிரதேசத்தில் பொல்பித்தி கம கல்வி வலயத்துக்குட்பட்ட தொர வேருவ பகுதியிலுள்ள பாட சாலை ஒன் றில் கல்வி கற்கும் 9 மாணவிகள் திடீர் சுக வீனம் காரணமாக மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள் ளனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம் பெற்றது. 6 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவிகளே இவ் வாறு சுகவீனமடைந்துள்ளனர்.

பாடசாலை முடிவடையும் நேரத்தில் மாணவிகள் சிலருக்கு தோல் அரிப்பு மற்றும் உடலில் தழும்புகள் ஏற்பட் டுள்ள நிலையில் திடீரென சுகயீனம டைந்துள்ளனர்.

இதனையடுத்து அதிபரும் ஆசிரி யர்களும் சுகவீனம டைந்த மாணவிகளை பொல்பித்திகம ஆதார மருத்துவ மனை யில் சேர்த்தனர்.

மாணவிகளின் நிலைமை கவலைக் கிடமாக இல்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

## முஸ்லிம்...

பாராளுமன்றத் தேர்தலில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி யுடன் கைகோத்தன. தொடர்ந்து அந்தக் கூட்டணியிலேயே இந்தக் கட்சிகள் தொடர்ந்து வருகின்றன.

இந்தப் பின்புலத்தில் ரணில் விக்கிரம சிங்க தமது கூட்டணிக்குள் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸை கட்சிகளை சேர்த் தால் முஸ்லிம் மக்களின் கணிசமான வாக்குகளை தனக்கானதாக மாற்றலாம் என்று கருதுகிறார்.

இது தொடர்பில், ரிஷாத் பதியுதீன் மற்றும் ரவூப் ஹக்கீமுடன் இதுதொடர் பில் இரகசிய பேச்சுகள் நடைபெற்றுள் ளன. எனினும்,அவர்கள் இதுவரை எவ்வித சாதகமான பதிலையும் அளிக்கவில்லை.

இதேசமயம், ரவூப் ஹக்கீம் ஐக்கிய மக்கள் சக்தியுடனான கூட்டணி தொட ரும் என்று அண்மையில் ஊடகங்க ளுக்கு தெரிவித்திருந்தார். எனினும், ரிஷ ாத் பதியுதீன் ஜனாதிபதித் தேர்தல் குறித்து எந்தக் கருத்தும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 200 அடி பள்ளத்துக்குள் இடிந்து விழுந்த கட்டடம்

ஹற்றன், ஜூலை 07

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதி யில் கினிகத்தேனை, மில்லகஹமுல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வந்த மூன்று மாடி கட்டடம் ஒன்று நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இடிந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

கினிகத்தேனை பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக இந்தக் கட்டடம் 200 அடி பள்ளத்துக்குள் இடிந்து வீழ்ந்துள்ளது.

இந்தக் கட்டடம் இடிந்து விழும் போது அங்கு எவரும் இல்லை எனவும், தரமற்ற முறையில் கட்டடம் கட்டப் பட்டதால் இவ்வாறு இடிந்து விழுந்தி ருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சிங்கப்பூர் செல்கிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூலை 07


வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணனின் அழைப்பின் பேரில், அமைச்சர் அலி சப்ரி செல்கிறார்.

இந்தப் பயணத்தின் போது, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சிங்கப்பூர் அமைச்சருடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இரு தரப்பு சந்திப்புக்களில் ஈடுபடுவார்.

இதேவேளை, சிங்கப்பூரில் 09 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த ஆண்டிற்கான ஆசிய - பசிபிக் உச்சி மாநாட்டில் பங்கேற்கவுள்ளார். (எ)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 3 தொன் பீடி இலைகள் பறிமுதல்



சென்னை, ஜூலை 07

இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 3 தொன் பீடி இலைகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே உள்ள ஆலந்தலை கடற்கரை பகுதியில் கடலோர பாதுகாப்பு குழும பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, கடற்கரையில் சந்தேகப்படும் படியாக நின்ற லொறியை பொலிஸார் சோதனையிட்டனர்.

அந்த லொறியில் 87 மூடைகளில் தலா 35 கிலோ எடை கொண்ட சுமார் 3 தொன் பீடி இலைகள் இருந்தன.

பொலிஸார் நடத்திய விசாரணையில், பீடி இலை பொதிகள் படகு மூலம் இலங்கைக்கு கடத்தப்படவிருந்தமை தெரியவந்தது. இதனைடுத்து, பீடி இலை பண்டல்கள் மற்றும் லொறியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தொடர்ந்து, பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகளை சுங்கத்துறையினரிடம் பொலிஸார் ஒப்படைத்ததை தொடர்ந்து, சுங்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# கதிர்காமம் உற்சவத்தை முன்னிட்டு ஐந்து பாடசாலைகளுக்கு விடுமுறை

கதிர்காமம், ஜூலை 07

கதிர்காமம் முருகன் கோவில் உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தை சுற்றியுள்ள ஐந்து பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, தெடகமுவ கனிஷ்ட வித்தியாலயம், கதிர்காமம் தேசிய பாடசாலை, செல்லக் கதிர்காமம் மகா வித்தியாலயம், சசீந்திர குமார ஆரம்பப் பாடசாலை மற்றும் கோதமி கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே இவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் உற்சவம் முடிவடையும் வரை மேற்குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி அறிவிக்கப்படும் என கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவு தெரிவித்துள்ளது.

கதிர்காமம் உற்சவமானது நேற்றுச் சனிக்கிழமை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அரசின் ஜனநாயக மீறல்களுக்கு இனியும் இடமளிக்க முடியாது!

## ஐக்கிய மக்கள் சக்தி இடையீட்டு மனு



கொழும்பு, ஜூலை 07

**மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஏற்கனவே காலம் தாழ்த்தப்பட்டு மக்களின் வாக்குரிமை அணு அணுவாக மீறப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தாமலிருப்பதற்கான மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான ஜனநாயக மீறல்களுக்கு இனியும் இடமளிக்காத வகையில் ஐக்கிய மக்கள் சக்தி இடையீட்டு மனுவைத் தாக்கச் செய்துள்ளதாக பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் அது மனித உரிமை மீறலாகும் எனக் குறிப்பிட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது முற்றிலும் ஜனநாயகத்துக்கு விரோத மான செயலாகும். எனவேதான் ஐக்கிய மக்கள் சக்தி இடையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளது. திங்களன்று ஐவரடங்கிய நீதியரசர் குழாம் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளது. அரசமைப்புக்கமைய இலங்கைப் பிரஜைகளுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீறுவதற்கு இடமளிக்க முடியாது.

அது மக்களின் இறையாண்மையுடன் இணைந்த ஒரு விடயமாகும். காலங்காலமாக தேர்தல் காலம் தாழ்த்தப்படுமானால் அது ஒரு ஜனநாயக நாடாக இருக்காது. அபிவிருத்தித் திட்டங்களுக்காக எனக் கூறி, தேர்தல் நடவடிக்கைகளுக்காக 8,750 மில்லியன் ரூபாயை அரசாங்கம் ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது. ஆளுங்கட்சி தமக்குள்ள பெரும்பான்மையை பயன்படுத்திக் கொண்டு இவ்வாறு செயல்படுகிறது. ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக ஆளுநர்கள் பல சந்தர்ப்பங்களில் சட்டத்தை மீறுகின்றனர்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை ஆளுநர்கள் தெரிவு செய்கின்றனர். எதிர்வரும் 14 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான தினத்தை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு கிடைக்கப்பெறும். இவ்வாறான நிலையிலேயே ஆளுநர்களும் கட்சி சார்பாகச் செயல்படத் தொடங்கியுள்ளனர். இது தொடர்பில் நாம் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கு விளக்கமளித்துள்ளோம். மக்களுக்கு அவர்களது நிலைப்பாடுகளை சுதந்திரமாக வெளியிடக்கூடிய சூழலில் நியாயமான தேர்தல் நடத்தப்படவேண்டும் - என்றார். (எ)

# மேம்பட்ட கல்வி சீர்திருத்தம் நாட்டுக்கு தற்போது தேவை!

## ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜூலை 07

புதிய பொருளாதாரத்துடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மேம்பட்ட கல்வி முறையும் அவசியமானது. அதற்கான கல்வி சீர்திருத்தங்கள் தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி - ஹால் டி கோல் ஹோட்டலில் நேற்று, தென் மாகாணத்தின் 200 பாடசாலைகளுக்கு 2,000 நவீன வகுப்பறைகள் மற்றும் 2,000 கைக்கணினிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

அங்கு கருத்துரைத்த ஜனாதிபதி,

"தற்போது உலகம் நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறி வருகிறது. அதற்கேற்ப, இந்நாட்டின் கல்வி முறையும் நவீன தொழில்நுட்பத்துடன் நடத்தப்பட வேண்டும். அதற்குத் தேவையான கல்விச் சீர்திருத்தங்கள் அமைச்சால் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அன்று நாம் பல கல்விக் கொள்கைகளை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினோம். அந்தக் கல்விக் கொள்கைகள் அன்றைய காலத்துக்கு ஏற்றதாக இருந்தாலும், இன்று ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியால், கல்வித் துறையில் புதிய சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

தற்போது பாடசாலைகளில் செயற்கை நுண்ணறிவுக் கழகங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கல்வியை தொடங்கி சில வருடங்கள் ஆகின்றன.

இந்த ஆண்டு நாம் ஆரம்பித்திருக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் திட்டத்தை முன்னெடுத்து செல்ல ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சி தேவைப்படும். அதற்குத் தேவையான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிளை அரசாங்கம் ஏற்படுத்தும். மத்திய கல்லூரிகள் மற்றும் தேசிய பாடசாலைகள் செயற்கை நுண்ணறிவு பாடசாலைகளாக மேம்படுத்தப்பட வேண்டும்.

நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறுவதில் அண்டை நாடான இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது. பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கைக்கு ஐ. ஐ. டி. தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியாவுடன் எரிசக்தித்துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுகளும் வெற்றிகரமாக நடந்து வருகின்றன. மலேசியாவில் நான் எலான் மஸ்குடன் கலந்துரையாடினேன். அவரது நிறுவனத்தின் இணையத் தொழில்நுட்பம் பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம். இதன் மூலம் தொலைதூர கிராமங்களில் உள்ள பிள்ளைகளுக்கு தொழில்நுட்பக் கல்வி வழங்கும் வாய்ப்பு கிடைக்கும் - என்றார். (ஐ)

# சாகலவின் வாகனத் தொடரணியை காணொலி எடுத்த இளைஞன் கைது

கொழும்பு, ஜூலை 07

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவின் வாகனத் தொடரணியை கையடக்க தொலைபேசியில் காணொலி எடுத்த 21 வயது இளைஞன் ஒருவர் கொழும்பு, கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞன் அம்பாறை, பொத்துவில் பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன் இவரிடமிருந்த கையடக்க தொலைபேசியும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞன் பிறிதொரு நபருடன் டுபாய் தூதரகத்துக்கு வருகை தந்தவர் எனவும், இதற்கு முன் இவ்வாறான வாகனத் தொடரை கண்டதில்லை என்பதால் தொலைபேசியில் காணொலி எடுத்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

# ரூ. 300 மில்லியன் செலவில் 200 ஸ்மார்ட் வகுப்பறைகள்

கொழும்பு, ஜூலை 07

தென் மாகாண பாடசாலை மாணவர்களுக்கு 200 ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் 2,000 ரப் கணனிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் காலி ஹோல் டி கோல் மண்டபத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தத் திட்டத்துக்கு இந்திய உதவியுடன் 300 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் வேண்டுகோளுக்கு இணங்க குறித்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண [illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.